471

No. M. 2210

வருஷ சந்தா ரூ. 1-8-0

AUTHOR & PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

JEGAN MOHINI

மலர் 7 ஜகன்மோகினி இதழ் 9



தனிப் பிரதி அணா 3.

3L
ஊவ11, N24 JM
N30.7.9.
210024

மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்

ஏழாவது ஆண்டு ! ஏழாவது ஆண்டு !!

ஜகன்மோகினி.

இதன் 7-வது ஆண்டு 1929ளு டிசம்பர்மீ முதல் ஆரம்பம். இதில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் எழுதப்பட்ட "சாருலோசனை" என்னும் அற்புதமான நாவலின் இரண்டாம்பாகமும், ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலியுள்பட ரூ. 1-8-0 தான். "சாருலோசனை" யின் முதல்பாகம் சென்ற வாண்டின் கடைசி நான்கு சஞ்சிகைகளில் வெளிவந்ததால், புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் எட்டணா கூடச் சேர்த்து ரூ. 2 அனுப்பினால், அவற்றை அனுப்புகிறோம்.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை வி. பியில் அனுப்புவதால் சந்தா நேயர்களுக்கு மூன்றணா அதிக செலவுண்டாகுமாதலால் முன்பண மனுப்புவதே நலம்.

(2) இவ்வாண்டில் நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் புதிய நம்பரைக் கொடுப்பதால் இனிமேல் அவர்கள் எழுதும் கடிதங்களில் புதிய நம்பரை மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் கடைசித் தேதியில் நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 தேதிக்குள் கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு, மூன்றணா ஸ்டாம்பு அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத விடங்களில் ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையை இனாமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

மானேஜர்.

16 MAR 1931

4—வது அதிகாரம்

திருமணச் சம்பவம் — தெரிவையின் பரிபவம்

தோட்டத்தில் சுலோசனா கூறிய வார்த்தைகளால் வெதும்பி, மனக் கலக்கங் கொண்ட நமது விமலநாதன், கண்ணில் நீர் ததும்ப வேறொரு புறம் சென்று அங்கிருந்த ஓராசனத்தில் அமர்ந்தான். அவன் மனமென்னும் மலையைச் சோக மென்னும் மேகம் வந்து கவிந்து கொண்டிருந்ததால் எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணியவாறு பொழுது போவதுங் தெரியாது படுத்துவிட்டான். விமலநாதன் நமது சுலோசனாவைப் பார்த்து பல வருடங்களாய்விட்டன. அதாவது, அவளுடைய அதி பால்ய காலத்தில் விவாக சமயத்திற் கண்டதுதான் கடைசி தரம். பிறகு அவளுடைய புருஷன் இறந்துவிட்டதற்குத் தன் தமக்கையுடன் சுலோசனாவின் வீட்டிற்கு வந்தும் அவளைக் காண வியலாமற் போய்விட்டது. கடைசி காலத்தில் தான் சுலோசனாவைப் பார்த்தபோது கல்யாணக் கோலத்துடன் சிறுமியாய்ப் பாவாடையும் சொக்காயும் அணிந்து கொண்டு கேவலம் ஒன்றுமே அறியாப் பேதையாய் ஓடி யாடி விசனமற்றவளாய் இருந்தாள். "ஆகா! நாம் சுலோசனாவைக் கண்டு சரியாக ஏழு வருடங்களாய்விட்டனவல்லவா? அக்காலத்தில் அவள் இருந்த நிலைமையையும், இப்போதிருக்கும் நிலைமையையும் பார்த்தால் எவ்வளவு வித்யாசங்கள் ஏற்பட்டு விட்டன; விசன மென்பதே அறியாதிருந்த அவளுடைய முகமானது தற்போது துக்கத்

சிலர் கோயிலுக்குத் தாமும் செல்வதில்லை; செல்பவர்களையும் தூஷிப்பது. இவ்விரண்டினால் என்ன லாபமோ தெரியவில்லை. அவர்களை நாஸ்திகரென்று சொன்னால் கோபம் தீபோல வந்துவிடுகிறது. மனத்திற்குள் பக்தியாம்.

 210024

தையே தன்னிடம் நிரப்பிக்கொண்டு இருக்கின்றதே! அவளுடைய விழிகளானவை அழகிய மானின் மருண்ட பார்வையைப் போல விளங்குவதில், தாங்க வியலாத சோகத்தையும் அவ் விழிகள் தெட்டெனெ எடுத்துக் காட்டிக் காண்போரின் மனதைக் கரைந் துருகும்படி செய்கின்றனவே! ஐயோ! அவளை ஈசன் விதந்து என்கிற சொல்லிற்கு ஆளாக்கி விட்டபோதிலும் அந்தப் பதத் திற்கு அவள் ஒரு சிறிதும் அர்கதையாகத் தோன்ற வில்லையே! மங்களகரமான தேஜஸல்லவா அவள் முகத்தில் குடிகொண்டிருக் கின்றது. அவள் முகத்தின் விலக்ஷணத்தையும், வசீகரத்தையும் அமைப்பையும் நோக்கின் அவளை சுமங்கலி என்று யாவரும் கூறு வார்களே யன்றி அமங்கலி என்று சொல்வார்களா? ஆகா! ஏழு வருடங்களுக்கு முன்னர் கண்ட என் கண்மணி சுலோசனாவின் முகமும் அவளுடைய தேக வளர்ச்சியும் இப்போது எவ்விதம் பிரகாசிக்கின்றது! 'அவளா சுலோசனா!' என்றல்லவா நான் பிரமித்துவிட்டேன். அவளுடைய சிறு பிராயத்தில் கண்ட சாயல் முற்றும் தற்போது மறைந்து விடினும் என் மனத்திற்குள் புகுந்துகொண்டிருந்த அவளுடைய தோற்றத்தின் நினைவினாலும், அவளுடைய தம்பி கோபிநாதனின் சாயல் அவள் முகத்தில் இருப்பதாலும் அவளை நான் இன்னாள் என்று கண்டுகொள்ள ஏது உண்டாயிற்று. அவள் நடந்து சென்ற காட்சி என் இதயத்தைக் கவர்ந்துவிட்டதே. என்ன எழில்! நடை! எவ்வளவு சிறிய இடை! எத்தகைய துல்லிய உடை! மனத்தைக் கவரும் அழகிய பின்னல் சடை. அடடா!....உம்....ஐயோ! எல்லாம் பாழாகிவிட்டதே! எல் லாம் பஸ்மமாகிவிட்டதே! என்ன அநியாய உலகம்! அக்கிரமப் பழக்கம்! சீச்சீ! பாழும் சமூகத்திலுள்ள இத்தகைய கொடிய பழக்கங்களை வேரறுக்க வேண்வேதே முக்கியமான சீர்திருத்த மாகும். கேவலம் பால் மணம் மாறாத குழந்தைக்கு விவாக மென்கிற சடங்கைச் செய்து விடுவதாம். அந்த மணமகன் உடனே

வார்த்தையாடத் தெரியாத சிலர் பிறர் வார்த்தையை தூஷிக்க வெகு விரை வில் முன்வந்துவிடுகிறார்கள். தமது வார்த்தையை சீர்பெறச் செய்வதற்கு சக்தியில்லை.

இறந்துவிட்டால் அக் குழந்தையின் சகல போக பாக்யங்களும் கூடவே அழிந்துவிட்டனவாம். இதென்ன அநியாயம்! ஐயோ! சுலோசனாவுக்கு மணம் நடந்ததும் அவள் மணவாளனையும் சரியாக நினைவில் வைத்துக்கொள்ளக்கூடாத அவ்வளவு சிறு பிராய மாயிற்றே! அந்தோ! இந்நிலவின் ஜோதிக்கும் அவளது எலுமிச்சம் பழ நிறத்திற்கும், கட்டியிருந்த கருப்புச் சேலையின் காந்திக்கும், காதில் ஜொலிக்கும் வைரக் கம்மல், லோலாக்கின் அழகிற்கும், அவள் பார்த்த பார்வையின் கவர்ச்சித்தன்மைக்கும், ஆகா! எத்தனை பொருத்தமாயும் வர்ணித்துக் கூற வியலாத தேஜோ மயமாயும் விளங்கிற்று! இத்தகைய 'சுந்திரவதியா அமங்கலி? இவளா உலகத்தில் எல்லாவற்றிலும் தள்ளப்பட்டவள்? சேச்சே! அநியாயம்! அநியாயம்!'' என்று பலவாறு எண்ணி, எழுந்து செல்லாமல் அவ்விடத்திலேயே வெகுநேரம் படுத்திருந்து பின்னர் தன் நண்பனின் வீட்டிற்குச் சென்றான்.

விமலநாதன் (லா காலேஜில் படித்துவிட்டு ஓர் பெரிய வக்கிலிடம் பழகத் தொடங்கினான். அவனுக்குத் தற்போது 22-வது வயது நடைபெறுகின்றது. அவன் பெற்றோர்களுக்கு விமலநாதனே அருமையான மகன். ஜானகியம்மாள் மூத்த புதல்வி. அவள் இறந்துவிட்ட பிறகு அவர்களின் பெற்றோர்கள் அபாரமான துக்கத்தை அடைந்து, அதனால் மிகவும் மெலிந்து விட்டார்கள். விமலநாதனைக் கண்ணாகப் பாவித்துத் தமது முழு பிரியத்தையும் அவன் பால் வைத்து அவனையே கதி யென்று நினைத்து வந்தார்கள். தமது புதல்வனை ஒரு விநாடி நேரமும் விட்டுப் பிரிய அவர்கள் மனமிசைவதில்லை. விமலநாதன் தனது கலாசாலையின் விடுமுறைக் காலத்திலும் வெளியூருக்குச் செல்லாது தனது பெற்றோர்களின் விருப்பப்படிக்கு அவ்விடத்திலேயே இருந்து வருவான். எனினும் அவன் மனத்தில் மட்டும் சுலோசனாவின் நினைவும், அவளுக்குத் தின்பண்டங்களை வாங்கி யளித்த சம்பவங்

சொந்த மனிதராயினும், அயல் மனிதராயினும் ஒருவரை ஆதியில் அலக்ஷ்யம் செய்துவிட்டுப் பிறகு "வா; வா!'' என்று வருந்தி அழைத்து உபசரித்துவிட்டால் ஆதிசெய்திகள் மறந்துவிடுமோ!

களும், அவள் கொஞ்சிக் கொஞ்சிக் குதலைபாடிப் பேசிய காட்சியும், பின்னர் அவள் விதி முடிந்த வயிற்றெரிச்சலும் ஒருபோதும் மறக்கக் கூடாமல் விருத்தியாகிக்கொண்டே வந்ததுடன் காளடைவில் அவ்வெண்ணங்கள் அனைத்தும் ஒன்று கூடி வேறு உருவமாக மாறி, அவ்வுருவமும் அதற்குள்ள அனுபவங்களும் அவன் மனதில் பதிந்து பசு மரத்தாணிபோன்று கெட்டியாகிவிட்டது. அதை அவன் பாரிடத்திலும் வெளியிடாமல் தன் ;உள்ளத்தில் மறைத்து வைத்துக்கொண்டிருந்தான். நாட்கள் செல்லச் செல்ல சுலோசனுவைப் பார்க்கவேண்டு மென்கிற ஓர் தடுக்க வியலாத வேட்கை அவன் மனத்தில் எழுந்து போராடத் தொடங்கியது. அத்தகைய வேட்கையை அவன் பிறரிடம் தெரிவிக்க வெட்கிச் சில காலம் வாளாவிருந்தான். பிறகு அவனுடைய வக்கில் ஏதோ காரியமாக நமது மங்கைபற்காசியாகிய சுலோசனு வசிக்கும் ஊருக்கு வந்தார். அவருடன் தானும் செல்வதாகச் சாக்கு வைத்துக்கொண்டு புறப்பட்டு நாம் முன்னர் தெரிவித்தவாறு இங்கு வந்து சேர்ந்தான்.

அவ்வாறு வந்தும், சுலோசனுவைத் தான் பார்க்கும் பாக்யம் கிடைக்காமையால் நிரம்பவும் வருந்திக் கண் கலங்கினுன். சுலோசனுவின் வார்த்தைகளை மீறித் தான் அவள் வீட்டிற்குச் செல்லவும் மனந் துணியவில்லை. ஆகையால் மறுதினமே புறப்பட்டுத் தன் ஊருக்குச் சென்று விட்டான். இங்கு நடந்த எந்த விஷயத்தையும் பாருடனும் சொல்லாது மறைத்துவிட்டான். இவ்விதமே சில தினங்கள் சென்றன. விமலநாதனுடைய பெற்ருேர்கள் அவனுக்கு விவாகம் செய்துவைக்க வேண்டிய ஏற்பாட்டில் இறங்கிவிட்டார்கள். அடிக்கடி இவ்விஷயமாகவே வீட்டில் பேசுவதும் சில விடங்களுக்குச் சென்று பெண் பார்ப்பதுமாக இருந்தார்கள்.

விமலநாதனுக்கு இந்த ஏற்பாடுகளில் சிறிதும் பிடித்தமென்பதே யில்லை யாகையினுல் அவர்களுடைய வேலையில் தலை

ஒருவரால் தனக்கு ஏதேனும் காரியம் ஆகவேண்டி இருந்தால் அப்போது அவர்களுடைய யோகக்ஷேமங்களை எல்லாம் விசாரிப்பது; தடபுடலான உபசாரங்களைச் செய்வது; தனது காரியத்தை நிறைவேற்றிக்கொள்வது.

பிடாமல் "இப்போது எனக்கு விவாகம் வேண்டாம்; பிறகு பார்த்துக்கொள்வோம். நான் தனித்து வக்கீல் தொழில் ஆரம்பிக்கும் சமயத்தில் விவாகம் செய்து கொள்ளுகிறேன்" என்று மட்டும் கூறித் தடுத்து வந்தான். இவ்விதமே சண்டையும் மனஸ்தாபமுமாகச் சில நாட்கள் சென்றன. அதன்பிறகு விமலநாதனுடைய தந்தை ஒரே பிடிவாதமாக எப்படியாவது விமலநாதனுக்கு விவாகம் செய்துவைத்துவிடவேண்டுமென்னும் தீர்மானத்துடன், அவருடைய சிநேகிதரான ஓர் பிரபல வக்கீலின் புதல்வியை ஏற்பாடு செய்யத் துணிந்து அதை விமலநாதனிடமும், அவன் தாயாரிடத்திலும் தெரிவித்தார்.

இதைக் கேட்டதும் விமலநாதனின் தாயார் உடனே சம்மதித்துவிட்டாள். விமலநாதனுக்கு ஏற்கனவே நாம் தெரிவித்தவாறு சற்றும் சம்மதமில்லை. எனினும் பெற்றோரிடத்தில் அதிக பயபக்தி யுள்ளவன். ஆகையினால் மறுக்கவோ இசையவோ இருவிதத்திலும் செல்லமாட்டாமல் தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டான். விவாக ஏற்பாடுகளோ தடபுடலாக நடக்கத் தொடங்கிவிட்டன. அவன் தனது தாயை நோக்கி மிகவும் பணிவுடன் பேசத் தொடங்கி "அம்மா! நான் சொல்வதற்கு என்னிடம் கோபித்துக் கொள்ளவேண்டாம். நான் விவாகம் செய்துகொள்ள மறுக்கவில்லை. ஆனால் என் மனதிற்கு இஷ்டமான நங்கையை விவாகம் செய்வித்தால் மெத்த நலமாயிருக்கும். அவ்விஷயத்தில் உங்கள் தயவுதான் முக்கியமாக வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டான்.

தாயார்:—அப்பா! அதற்கென்ன! அவ்வாறே செய்கிறேன். உன் மனத்திற்குகந்த மங்கை யார்? அதைத் தெரிவி.

விமல:—அம்மா! நான் தெரிவித்த பின்னர் என்மீது ஆயாசப்படலாகாது. என் அகத்தில் அமர்ந்துள்ள அணங்கு யாரெனில்

கடன்காரனுக்கு பாக்கியை செலுத்திவிடவேண்டுமென்கிறான் வீட்டுக்காரன்; பெண்ணுக்கு சீர்வரிசைகளைச் செய்துவிடவேண்டுமென்கிறாள் க்ரஹிணி; தனக்கு நிறைய நகை செய்துகொள்ளவேண்டுமென்று நினைக்கிறாள் பெண்.

நமது ஜானகியின் இளையாளுடைய மகள் சுலோசனாதான். அவளையே எனக்கு மணம் செய்விக்க ஏற்பாடு செய்யுங்கள்.

தாயார்:—என்ன! என்ன! சுலோசனாவையா! ஐயோ! உன் புத்தி ஏனடா இவ்விதம் பாழாகிவிட்டது. சுலோசனாவை உனக்கே கொடுக்கும்படி அவள் தகப்பனார் சொல்லி இருக்கையில் அந்த வார்த்தையைச் சிறிதும் கேளாமல் பிடிவாதமாக அந்தப் பாவி குழந்தையைப் பாழாக்கி விட்டாள். அழிந்து போன காரியத்தை இனி சரிப்படுத்துவதென்றால் முடியுமா? சுலோசனா யாது மறியாத பேதையாக விருப்பினும் அவளைத் தாங்கி யுள்ள அநியாயமான "விதந்து" என்கிற பட்டத்தைப் போக்க இனி யாராலேனும் ஆகுமா! விதவையை மணப்பதென்பது எங்கேனும் உண்டா! நமது வம்ச பாரம்பரை என்ன! குலத்தின் மேன்மை என்ன! பெரியோர்கள் வாழ்ந்த கண்ணியமான வாழ்வென்ன! இப்படிப்பட்ட மேன்மையான குலத்திலுதித்த நீ, ஒரு விதவையை மணப்பதென்றால் அது தகுமா? நமது குலமே நசித்து விடாதா? நமது வம்சமே பாழாகி விடாதா? பெரியாரின் பெயர்களுக்கு ஓர் அபகீர்த்தி வந்துவிடாதா. இதென்ன அக்கிரமம்! மணத்தை இழந்த மலருக்கு வாசனை யூட்டுவதென்பது ஒருபோதும் முடியாது. நீ உன்னுடைய அறியாமையினால் இவ்விதம் சொல்லிவிட்டதை உன் பிதா அறிந்தால் அவருக்கு அபாரமான கோபமும், மிகுந்த ஆத்திரமும் உண்டாகிவிடும். ஆகையினால் இப்படி அசட்டுத்தன மாக அவரிடமும் சொல்லிவிடாதே.

விமல:—அம்மா! நீ சொல்வதெல்லாம் வெறுங் கட்டுக் கதை தான். விதந்து என்கிற பட்டம் அவள் தாங்கிவிட்டதாக மனதில் நினைத்தாலல்லவோ அவ்விதம் தோன்றுகின்றது. கேவலம் பால் மணம் மாறாத ஓர் குழந்தைக்குக் கல்யாண மென்பதும், உடனே

முகமறியாத அன்னியராகவிருந்தாலும் மனங்கலந்த சிநேகிதம் உண்டாகிவிட்டால் பழகியவர்களைவிட அதிகமான சுபாவம் ஏற்பட்டுவிடுகிறது. இருவருடைய அன்பின் உறுதியைப் பொருத்ததே சிநேகம்.

கல்லெடுப்பு என்பதும்.—இவையென்ன அநியாயப் பழக்கங்கள்! அந்தக் குழந்தை, தான் விதந்து என்பதை அறியக்கூட முடியாத அத்தனை சிறு வயதில் அதற்கு வேண்டுமென்றே இத்தகைய பட்டத்தைக் கட்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் பாவிகளைத் தெய்வம் கேட்காமல் விடுமா? சுலோசனாவை நீ பார்த்தால் அப்போது சொல்வாய்! அவள் முகத்தில் சுமங்கலிகளுக்குரிய களை தாண்டவமாடுகின்றதே யன்றி, விதந்து என்று யாருமே சொல்ல மாட்டார்கள். அவள் விதந்துவானாலும் பாதக மில்லை. எனக்கு அவளையே மணம் புரியுங்கள். என்னுடைய மனத்திற்குச் சந்தோஷத்தை அளிப்பதற்காக மணம் செய்கிறீர்களா! அன்றி ஏதோ ஒரு கடனைத் தீர்த்து விடுவதென்று செய்யப் போகிறீர்களா! நீங்கள் செய்யப் புகும் மணத்தினால் என் மனமும் வாழ்வும் மணம் பெற்று மகிழவேண்டுமாயின் எனக்கு சுலோசனாவை மணம் புரியுங்கள். இல்லையேல் உங்கள் இஷ்டம்.

தாயார்:—அடே, விமலநாதா! இதென்ன மூடத்தனமாகப் பேசுகின்றாய்? உன் மனம்;போனவாறு நீ பேசுவது உனக்கு நியாய மாகப் படலாம். அந்த வார்த்தைகளைப் பெரியோர்களும் பிரமுகர் களும் ஒத்துக்கொள்வார்களா! இவ்வித அடாத காரியத்தைச் செய் வதென்றால் எவர் தான் மன மிசைவர்? வாய்ப்பேச்சில் மட்டும், "ஐயோ பாவம்! இத்தனை சிறிய விதவைக்கு விவாகத்தைச் செய்து விடலாமே!" என்று எல்லோரும் சகஜமாகக் கூறிவிடுவார்கள். காரியத்தை நடத்துவதில் அவர்கள் நாக்கு உள்ளே இழுத்து விடுகிறது. அவ்வாறு நடத்திக் காட்டுவதல்லவா சாமார்த்தியம்! அதற்கு ஒருவரும் முன் வருவதே இல்லை. மேலும் நம்முடைய வம்சத்தில் இவ்விதம் யாரேனும் செய்திருப்பார்களாயின் அதை யொரு சாக்காக வைத்துக்கொண்டு நாமும் செய்யலாமோ, என்னவோ! அதுவும் சந்தேகந்தான். இந்த வார்த்தையைக் கேட்டாலே உன் தந்தை நம்மை வீட்டை விட்டு விரட்டி விடுவார்.

நாலுவிதம் காய்கறியுடன் தினம் உண்பவர்களுக்கு வெறும் ரசம் அன்னம் பிடிப்பதில்லை. ரசம் அன்னமே புசித்துப் பழகியவர்களுக்கு நான்குவிதம் கறி காய் வகைகளுடன் உண்டால் தேகத்திற்கு ஆவதில்லை,

விதவையை மணப்பதும் அவளால் நமது சந்ததி விளங்குவதும் மிகவும் ஹீனமான காரியமல்லவா! சிச்சீ! இனிமேல் இந்த ஆசையை விட்டுவிடு. உன்னுடைய மனதை மாற்றும் சக்தி உன்னிடமே யிருப்பதால் நீ முதலில் அதைக் கவனித்தல் வேண்டும். உயர் குலத்தில் உதித்த நங்கை என்றாலும் விதந்து; என்கிற பிணி அவளைப் பிடித்துக்கொண்டதனால் நாம் அந்த வார்த்தையை இனி எடுத்தலே கூடாது. விமலநாதா! நீயோ பிறகு அப் பெண்ணைப் பார்த்ததும் இல்லை. அவ்வாறிருக்க உனக்கேன் இவ்வித எண்ணம் உதித்து, புத்தி இப்படித் திரும்பிற்று?

விமல:—அம்மா! இவைகளுக் கெல்லாம் காரணம் கிடையாது. நான் சுலோசனாவைப் பார்த்த நாட்கள் கொஞ்சமாயினும் என் மனதில் பதிந்துள்ள அன்பு ஓர் மலையைப் போன்று வளர்ந்து விட்டது. கடலுக்கும் எல்லை யுண்டு; அவ்வன்பிற்கு எல்லை யென் பதே கிடையாது. "ஆசாரம், ஆசாரம்" என்று கூறிக்கொண்டு ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கும் அக்கிரமங்களுக்குக்கணக்கு வழக்கில்லை. இவ்விதமான சிறு பிராயத்து விதவைகளால் நேரிடும் கேடுகளும் அவமானங்களும் எண்ணிக்கையற்றவை. அம்மா! நமது வம்சத்தின் உத்தம ஸ்திதியைப் பற்றிக் கூறுகிறீர்கள்; உண்மைதான்; நமது வம்சம் மிகவும் சிறந்தது தான். உங்களுடைய சிறிய தாயாரின் வீட்டில் சென்ற வருடம் நடந்த அமர்க் களத்தை மறந்துவிட்டீர்களா? அந்த வீட்டி லிருக்கும் மீனாள் என்கிற விதவைப் பெண் கள்ளத் தனமாகக் கர்ப்பந் தரித்து அதை அழிக்க முயன்று அதனால் அந்தப் பெண்ணுக்கு ஜன்னி கண்டு, இந்த வெட்கச் செய்தி ஊர் முற்றும் பரவி ஊர் சிரிக்க வில்லையா? விதவையாகிய உடனே அந்தச் சிறுமிக்கு புனர் விவாகம் செய்திருந்தால் அது வேறு மாதிரி மிகவும் நன்றாகப் போயிருக்கு மல்லவா? பின்னும், சிங்காரத்தின் செய்கை மறந்துவிட்டதா!

சிலர் தமது ரகசியங்களை ஒளிக்கவேண்டுமென்று பலவிதத்திலும் முயற் சிக்கின்றார்கள். சில சமயத்தில் முயற்சிப்பதெல்லாம் வீணாகி தமது செய் கையினாலோ, வாயினாலோ விஷயத்தை வெளியிட்டுவிடக்கூடிய சம்பவம் நேர்ந்துவிடுகின்றது.

அவள் ஓர் நாடகக்காரனை இழுத்துக்கொண்டு ஓடிவிடவும் தயாராகி விட்டதையும், அதைப் பகிரதப் பிரயத்தனம் செய்து மறைத்து விட்டதும் வெகு அழகான ஆசாரமோ? இன்னும் இது போன்ற குப்பைகளைக் கிளறுவதென்றால் ஒன்றிரண்டல்ல. அவைகளைக் கூறுவதால் நமக்குத் தான் அவமானம். அண்ணாந்து பார்த்து எச்சில் துப்பினால் அது நமது மார்பிலேயே விழும். உலகத்திலுள்ள நடவடிக்கைகள் இவ்விதமெல்லாம் இருக்கின்றன. விதவை என்ற பட்டத்தைத் தரித்துவிட்டதனால் அவளுக்கு என்ன குறைவு? விவாகமான பிறகு புருஷனுடன் சில தினமேனும் வாழ்ந்து, பின் விதவையானவர்களுக்கு வேண்டுமானால் இந்த ஆசாரம் என்பது இருக்கட்டும். கேவலம் உலகமே அறியாத—தன்னினைவையே அடையாத—சிறுமியை இழுத்து வைத்துத் தாலி கட்டுவதாம். அடுத்த மாதமே கட்டிய தாலியைக் களைந்து அவளுக்கு 'விதவை' என்று ஒரு பட்டம் கட்டி விடுவதாம். பிறகு ஆயுள் பரியந்தம் அவள் அவ்விதமே இருந்து மடிந்து போவதாம். இதென்ன அக்கிரம ஆசாரம் அம்மா! இதை நினைக்க என் வயிறு கொதித்துக் கொழுந்துவிட்டு எரிகின்றதே.

தாயார்:—அடே, விமலநாதா! நீ சொல்வது வாய் வார்த்தைக்குச் சரியானது. இன்று சிறு பெண்—விதவை—என்ற பரிதாபத்தினால் விவாகம் செய்தால், பிறகு எல்லா விதவைகளும் விவாகத்திற்கு இச்சை கொண்டு போட்டி போட முன் வந்து விடமாட்டார்களா! இதென்ன அபிப்பிராயமாய்ப் பேசுகிறாய்? ஒரு விரல் நுழைய இடங் கொடுத்துவிட்டால் தலையை நுழைத்துவிட மாட்டார்களா! இத்தகைய தீய காரியத்திற்கு இடமே கொடுப்பது கூடாது. விதவா விவாகம் செய்வதென்ற ஏற்பாடு ஆரம்பமாய்விட்டால் பிறகு நம் சமூகத்திற்கு அனர்த்தம் தான். இத்தகைய மூடத்தனமான வார்த்தையை இனிமேல் சொல்லாதே! எனக்கு வேலை இருக்கிறது; நான் போகிறேன். போகாத ஊருக்கு வழி காட்டு

தமது வைப்பாட்டியுடன் ரயிலில் ஏறிவிட்டால் அருகிலிருப்பவர்களையும் மறந்து காமத்திற்குக் கண்ணில்லை என்கிற வாக்கியத்தை நன்றாக நிரூபித்துவிடுகிறார்கள் சிலர்.

வது போல நீ ஆகாத காரியத்திற்கு அபிப்ராயப் பிடிவாதம் செய்யாதே!'' என்று கூறிக்கொண்டிருக்கையில் அங்கு விமலநாதனுடைய தந்தை வந்தார்.

விமலநாதனுடைய பிதா பெரிய போலீஸ் உத்தியோகத்திலிருப்பவர். அவருடைய உத்தியோகத்திற்கு ஏற்ற வீரத்தன்மையும், அதிகாரத் தொனியும், எப்போதும் ஆராய்ச்சி செய்யும் சுறுசுறுப்பான பார்வையும், கண்டோர் நடுங்கும்படியான ஓர் சக்தியும் அவருக்கு இயற்கையிலேயே பொருந்தியிருந்தன. அவரைக் கண்டால் பயப்படாத மனிதரே இல்லை. விமலநாதன் அவருடைய அருமைப் புதல்வனாயிருப்பினும் அவரிடத்தில் அவனுக்கு மிகுந்த பயமும், பக்தியும், மரியாதையும் எப்போதும் உண்டு. அவர் எதிரில் நின்று கூட அவன் பேசியது கிடையாது. ஏதேனும் தனக்கு முக்கியமான விஷயமாயின் அதைத் தெரிவித்துவிட்டு அம்மட்டோடு விலகிக்கொள்வான். தனது விவாக விஷயத்தில் தன்னுடைய எண்ணத்தைத் தன் தாயினிடத்தில் தெரிவித்தது போலத் தந்தையினிடத்தில் தெரிவிக்க மிகவும் பயந்துவிட்டான். "தெரிவித்து விடலாமா!'' என்று ஒரு சமயம் துணிகின்றான். உடனே அவருடைய தோற்றம் கண்முன் வர, மிகவும் பயந்து மௌனமாயிருந்து விடுவான். அந்தச் சமயம் அங்கு அவனுடைய தந்தை வந்ததும் மிகுந்த மரியாதையாயும், பயத்துடனும் எழுந்து நின்றான்.

அவனுடைய பிதா அங்கு வரும்போதே "அடே, விமலநாதா! நான் ஓர் அவசரமான 'கேஸ்' விஷயமாய் வெளியில் செல்கிறேன். நமது குமாஸ்தாவிடம் எல்லா விலாசங்களையும் கொடுத்திருக்கிறேன். அவன் அவைகளைக் கவரில் எழுதி விவாகப் பத்திரிகையை அனுப்புவான். நீ கூடவிருந்து விலாசங்கள் சரியாயிருக்கின்றனவா என்றும், தவறாமல் எல்லோருடைய விலாசங்

ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று பார்க்கையில் ரயிலில் ஏறுவோரும் இறங்குவோரும் அவரவர்களின் சம்பாஷணைகளும் ஓர் அற்புதமான காட்சியாகவிருக்கிறது.

களும் இருக்கின்றனவா என்பதும் கவனித்துத் தபாலுக்கு அனுப்ப வேண்டியதை அனுப்பிவிட்டு, நேரில் கொடுக்கவேண்டியவர்களுக் குச் சேவகன் மூலம் அனுப்பிவிடு. ஜாக்ரதை; இன்று மாலையில் 'சித்தப்பா' ஊரிலிருந்து வருகிறார்; நீயே ரயிலடிக்குச் சென்று அவர்களை அழைத்துக்கொண்டுவா! நான் சொன்னதெல்லாம் தெரிந்ததா! அப்புறம் மறந்துவிட்டேனென்று விழிக்காதே. நாளைய தினம் பிரயாணத்திற்குச் சித்தமாக வேண்டும்." என்று ஒரு சிம்ம கர்ஜனை செய்துவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் போய் விட்டார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட விமலநாதனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை; திகைப்படைந்தான். "அடடா! சகல ஏற்பாடு களும் முடிந்துவிட்டனவே! இனிமேல் ஒன்றும் பாக்கி இல்லை. கல்யாணம் ஆவதொன்று மட்டும் மிச்ச மிருக்கின்றது. பேஷ்! நமக்குத் தெரியாமலேயே சகல கல்யாணக் காரியங்களும் நடந்து விட்டன. கல்யாணப் பத்திரிகையும் அச்சுப் போட்டாய்விட்டது. ஆகா! இனிமேல் நாம் என்ன செய்யக்கூடும்? "போலீஸ் புலி" யென்று சாதாரணமாகக் கூறக் கேட்டிருக்கலாம். நமது அனு பவத்தில் நம் பிதாவே பெரிய போலீஸ் புலி, சிம்மமாக விளங்கு கிறார். அவரிடத்தில் என் மனதிலுள்ள விஷயத்தை வெளியிடவும் பயமாக விருக்கிறது. இத்தனை ஏற்பாடுகளாகிவிட்ட பின்னர், இவ்வளவுக்கும் பாதகமான ஓர் விஷயத்தை இனிமேல் கூறுவதில் உபயோகமும் இல்லை. உம்...நமக்குப் பிராப்தம் இவ்வளவு தான். என்னவிதமான முயற்சி செய்தாலும் கடவுளின் கருணை பூர்ணமாக இருந்தாலல்லவோ எல்லாம் நம்மிஷ்டப்படி நடக்கும். அந்தோ! விதந்துவாக விருப்பினும் நான் சுலோசனாவை மணக்க எண்ணி னேனே! என் எண்ணங்களெல்லாம் கிட்டாதனவா யொழிந்தனவே! என்ன செய்வேன்? ஹே, சுலோசனா! என்னுசையும் மோசமாகி விட்டது. உன்னைப் பார்ப்பதற்கே உத்தரவு கொடுக்க மறுத்து

ஓர் கல்யாணத்தை நிச்சயித்து முடிப்பதற்குள் பகீரதப்பிரயத்தனமாக விருக்கின்றது. அந்தக் கல்யாணத்திலோ சண்டை பூசல், மனஸ்தாபம் இத்தனை யும் எங்கிருந்தோ கூடி விடுகின்றன.

விட்ட நீ, பெரிய காரியமாகிய விவாக விஷயத்திற்கு சம்மதிப்பாய் என்று நான் நம்பவில்லை. எனினும், என்னுடைய மனதின் ஆசையினுல் நான் தவித்தேன். அதுவும் மண் விழுந்துவிட்டது. உன்னுடைய அழகைப் போல அந்தப் பெண்ணின் அழகு அமையுமா? இல்லை, இல்லை; ஒருபோதும் அமையாது. உனது விழியின் அழகிற்கும்; பார்வையின் எழிலுக்கும் எதுவும் ஈடாகாதே! சுலோசனு என்ற பெயரின் பொருளாவது: சு—அழகிய, லோசனு—நேத்திரத்தை உடையவள் என்பது. அழகிய நேத்திரமென்ற நாமத்திற்குப் பொருத்தமாக உனது விழிகளே இவ் வாழி சூழ் உலகனைத்தும் ஆளும் வல்லமை பெற்று விளங்குகின்றனவே! என்னுடைய எண்ணமெல்லாம் மண்ணுய் விட்டதே! எனது ஆசையெல்லாம் நிராசையாகி விட்டதே! என்ன செய்வேன்? இனி இக் கலியாணம் தடைப்படக்கூடிய வழி யேதும் என் புத்திக் கேற்பப் புலப்படவில்லையே" என்று தனக்குள் பலவிதமாக விசனப் பட்டுக்கொண்டு ஸ்தம்பமாக நின்றுவிட்டான்.

விமலநாதனின் மாறுட்டத்தைக் கண்ட அவனுடைய தாயார் "என்ன விமலநாதா! ஏதோ பெருத்த யோஜனையுடன் நிற்கின்றுய்? உன் பெற்றேர் உனக்கு நன்மை செய்வார்களே யன்றித் தீமைகள் செய்யமாட்டார்கள். இதை என்றும் உறுதியாக நம்பு. விதவையை மணப்பதால் நம்மை ஜாதி ப்ரஷ்டமல்லவா செய்துவிடுவார்கள்? அப்படியானுல் உனக்குப் பிறக்கும் குழந்தைகளை யார் விவாகம் செய்துகொள்வார்கள்? அவைகளை வைத்துக்கொண்டு தவிப்பது ஒரு பெரிய கஷ்டம். இதையெல்லாம் தீர யோசனை செய்யாமல் நீ ஒரே பிடிவாதமாக இருப்பது அழகல்ல. விமலநாதா! அந்த எண்ணத்தை விட்டுவிடு. சுலோசனுவையும், கோபிநாதனையும் கல்யாணத்திற்கு வரும்படியாக நீ ஓர் தனித்த கடிதம் எழுதி இன்றே போட்டுவிடு. எனக்கு

ஆயிரம் நக்ஷத்திரங்கள் சேர்ந்தாலும் ஓர் சந்திரனுக்குச் சமானம் இல்லை என்பது போல ஆயிரம் மனிதர்களிருப்பினும் காரியர்க்குத் தமது காதலுக்கு இணை வேறு யாரும் ஆகமாட்டார்கள்.

வேலை யிருக்கிறது; நான் போகிறேன்" என்று கூறிப் போய் விட்டாள்.

பிறகு விமலநாதன் மிகுந்த வருத்தத்துடன் சென்று தன் தந்தை தெரிவித்த வேலைகளைக் குமாஸ்தாவுடன் கூட விருந்து செய்துவிட்டுத் தன்னறைக்கு வந்தான். கல்யாணப் பத்திரிகையை படித்துப் பார்த்தான். கல்யாணப் பெண்ணின் பெயர் பரிமளா என்று வரைந்திருந்ததை நோக்கினான். "உம்....பெயர் மட்டும் அழகாகத்தானிருக்கிறது. அதற்கேற்ப மற்ற அம்சங்கள் பரிமளம் வீசுகின்றதோ, துர்மணம் வீசுகின்றதோ யாரறிவார்கள்? ரூபமும், குணமும் ஒருங்கே பொருந்திய சுலோசனாவுக்கு நிகர் பரிமளா ஆவாளா? உம்.....இனி நான் சுலோசனாவை நினைப்பதால் என்ன உபயோகம்" என்று பலவிதமாக எண்ணியவாறு சிறிது நேரம் படுத்துக்கொண்டிருந்தான். பிறகு எழுந்து சுலோசனாவுக்கு ஒரு கடிதம் எழுதி அதைத் தபாலுக்கு அனுப்பிவிட்டுப் பிறகு ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று வந்தவர்களை அழைத்துக்கொண்டு வீடு திரும்பினான்.

மறு தினம் கல்யாண ஏற்பாட்டுடன் எல்லோரும் ஊருக்குப் புறப்பட்டுவிட்டார்கள். விமலநாதன் ஏதோ பொம்மை போல ஆடுகிறானே யன்றி மனதில் சற்றும் சந்தோஷ மென்பதே இல்லை. எல்லோரும் விவாகம் நடக்கும் ஊருக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள். விவாக ஏற்பாடுகள் தடபுடலாக நடக்கின்றன. மாப்பிள்ளை வீட்டாரைச் சேர்ந்தவர்கள் நூற்றுக் கணக்கில் கூடி விட்டார்கள்; பெண் வீட்டாரின் கூட்டமும் வலுத்துவிட்டது. விமலநாதன் அந்தப் பரிமளாவை எப்போதோ பால்யத்தில் ஒரு சமயம் பார்த்திருந்தாலும் இப்போது அந்த உருவம் நினைவில் இல்லை. அவன் மனதில் சுலோசனாவின் உருவமே முற்றிலும்

ஒரு தனவந்தன் அதிகமாக ஆகாரத்தைப் புசித்தால் அதைக் கண்டு சந்தோஷித்து இன்னும் தடபுடலாக உபசரிக்கின்றார்கள். ஒரு ஏழை அவ்விதம் புசித்தால் அவனை ஏளனம் செய்து அஷ்ட தரித்திரனுக்கு அகோரப் பசி என்று நகைக்கின்றார்கள்.

வீற்றிருக்கிற படியால் பரிமளாவின் நினைவு சிறிதும் உண்டாக வில்லை; எனினும் தன் கழுத்தில் கட்டிவிட ஏற்பாடு செய்யப் பட்டிருக்கும் அப்பெண்ணைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவல் உண் டாயிற்று. சற்று சமாராகவேனும் இருப்பாளா? என்பதை அறி வதற்கே அவன் மனம் ஆவல் கொண்டது. ஆனல்; அப் பெண் ணைப் பார்க்க முடியவில்லை. அவன் தனியே ஒரு அறையில் அமர்ந்து யோசனை செய்தவாறு இருந்தான்.

* * * * *

இது இங்ஙனமிருக்க, நமது மின்னிடை மாதரசி சுலோசனு எவ்விதமிருக்கின்ருளென்பதை அறிய அவளிடம் செல்வோம். கலாசாலையின் உபாத்தியாயினி கூறிய வார்த்தையைக் கேட்டு அவள் நடுநடுங்கிப்போய் அப்படியே நின்றுவிட்டாள். கலாசாலையிலோ பெண்கள் கூட்டம் நிறைந்திருக்கின்றது. அத்தனை கூட்டத்தின் மத்தியில் நமது சுலோசனு, வேடன் கையிலகப்பட்ட மாடப்புரு வைப்போன்று தவிக்கின்ருள். தான் என்றும் கண்டும், கேட்டுமறி யாத மாற்றத்தை இன்று தனது உபாத்தியாயினி யிடத்தில் கண்ட தும் கேட்டதும் சுலோசனுவுக்கு மிக்க வியப்பும் சகிக்கமுடியாத துக்கமும் பொங்கிவிட்டன. ஐந்து நிமிடநேரம் ஒன்றும் பேசா மல் மௌனமாக நின்ருள். அருகிலிருந்த சரோஜனிக்கும் இம் மொழியினுல் அடங்காத துக்கமும் கோபமும் வந்துவிட்டது. அவ ளுக்கும் விஷயம் இன்னதென்பதே தெரியவில்லை. எனினும் சுலோ சனுவின் அப்போதைய தோற்றம் அவளை மிகவும் புண்படச் செய்துவிட்டது. சுலோசனுவின் மற்ருெரு உயிர்த்தோழியாகிய பிரேமா மணி என்பவள் அந்தக் கலாசாலையிலேயே வேறு வகுப் பில் இருப்பவள். அவளுக்கு நமது சுலோசனுவின்மீதுள்ள வாஞ் சைக்கும், அன்பிற்கும் எல்லையென்பதே கிடையாது. சுலோசனு வைத் தன்னுடன் பிறந்த சோதரியைப் பார்க்கிலும் பன்மடங்கு

தனமுடைய நாத்தனுர் ஏழெட்டுக் குழந்தைகளுடன் அண்ணன் வீட்டிற்கு வந்தால் அண்ணி தடபுடல் செய்கிருள். ஏழையான நாத்தி 4-5 குழந்தை களுடன் வந்துவிட்டால் அவளடையும் சிறுமை கூறற்பாலதன்று.

அதிகமான பிரேமையுடன் கவனித்து வருபவள்; சுலோசனாவின் முகம் சற்று விசனத்தினால் வாடிற்றாயின், அதனைக் கண்டு சகியாத அத்தனை இளகிய நெஞ்சத்தை உடையவள். சுலோசனாவைப் பார்ப்பதும், அவளோடு பேசுவதும், அவள் இனிய கானத்தைக் கேட்டு மகிழ்வதுமே பிரேமாமணிக்கு ஆநந்தமும், ஆகாரமும் ஆகும். இத்தகைய அன்புள்ள சிநேகிதை அந்தக் கலாசாலையில் சுலோசனாவின் உபாத்தியாயினியிடம் ஏதோ பேசும்பொருட்டு அகஸ்மாத்தாக அவ்விடம் வந்தாள். அங்கு சுலோசனா நிற்கும் நிலைமையையும் உபாத்தியாயினி கூறிய மொழிகளையும் கேட்டது தான் தாமதம். பிரேமாமணியின் கண்ணில் ரத்தம் வழிகின்றது. அவளுடைய ஹ்ருதயம் படபடவென்று துடிக்கிறது. அவளுக்கு அப்போது உண்டான சீற்றத்திற்கு எல்லையே இல்லை. சீறியெழும் நாகம்போல அவள் ஒரே முறைப்பாக உபாத்தியாயினியிடம் சென்று அந்தம்மாள் கையைப் பிடித்து அருகிலிருக்கும் உபாத்தியாயினி அறைக்கு அழைத்துச் சென்று "அன்புள்ள தலைவியே! இதென்ன காரியம் செய்கிறீர்கள். சுலோசனாவின் மீது உங்களுக்குச் சந்தேகம் இருக்கும் பக்ஷத்தில் அவளைத் தனிமையில் அழைத்து விசாரிப்பதா? அன்றி, அத்தனை பெண்களின் மத்தியில் விசாரிப்பதா? இத்தனை வருடமாகப் பழகும் சுலோசனாவின் குணத்தை இந்த கலாசாலை முற்றிலும் நன்கறியும். அவ்வாறிருக்கையில் தாங்கள் ஏதோ ஒரு அனுமானத்தை—யாருடைய கலக மொழிகளையோ—நம்பி இவ்விதம் பேசலாமா! அவளுடைய நிலைமையையும், பூர்ணமான உத்தம குணத்தையும், போக்யதா பக்ஷத்தையும் அவளுடைய உயிர்த்தோழிகளான நாங்கள் அறிவோமேயன்றிப் பிறர் அறியமாட்டார்கள். அவள் நிரபராதி, மகா பரிசுத்தையென்று நாங்கள் பிரமாணம் செய்வோம். நீங்கள் கூறிய வார்த்தையிலிருந்து ஏதோ தப்பான எண்ணம் அவள்மீது உங்களுக்கு இருப்பதாகத் தெரிந்துகொண்டேன். நடந்த விஷயம் என்ன? சுலோசனா! சரோஜனி! நீங்கள்மட்டும் வாருங்கள்" என்று பிரேமாமணி தடபுடலாகப் பேசி அழைத்தாள்.

பத்துப் பெயர்களாக சேர்ந்துகொண்டு கால் நடையாக வெகு தூரம் சென்றால் சிரமமே தெரிவதில்லை. அதே இடத்திற்குத் தனியாகச் சென்றால் தாங்கமாட்டாத சிரமம் உண்டாகின்றது.

அந்தக் கலாசாலை அதிகாரிக்குப் பிரேமாமணி மிகவும் வேண்டியவள். அதோடு பிரேமாமணியிடத்தில் கமலாசனி தனது சொந்த விஷயம் ஒன்றில் சிக்குண்டிருப்பதால் உள்ளுக்குள் பயம் உதைக்கின்றது. பிரேமாமணியின் வார்த்தையும், சீற்றமும் தடபுடலாக இருப்பதைப் பார்க்கும்போதே கமலாசனிக்கு மனத்தில் திகில் பிடித்துக்கொண்டது. ஏனெனில், கமலாசனி கலாசாலையின் விஷயமாக ஒரு சமயத்தில் ஒரு குற்றம் செய்துவிட்டதைப் பிரேமாமணி கண்டுபிடித்துவிட்டாள். அதை மேல்அதிகாரியிடத்தில் தெரிவிக்கவேண்டாமென்று வெகுவாய்க் கேட்டுக்கொண்டதனுல் பிரேமாமணியும் அந்தக் குற்றத்தை வெளியிடாது அப்படியே மறைத்துவிட்டாள். அந்த சம்பவம் இப்போது கமலாசனியின் மனத்தில் தெட்டென நினைவிற்கு வந்தது. அவள் பிரேமாமணியின் இரு கரங்களையும் பற்றிக்கொண்டு "என் அன்பான மணி! ஏதோ நினைவினுல் நான் அவ்விதம் பகிரங்கமாகக் கேட்டுவிட்டேன். சுலோசனுவிடத்தில் எனக்குள்ள பிரியத்தை நீயுமறிவாய். எனினும் இப்போது நடந்துள்ள விஷயங்களைக் கேட்டு நானே கலங்கிவிட்டேன். நானடைந்த வியப்பு சொல்லுந்தரமன்று. இதோ! இக்கடிதங்களைப் பார்" என்று கொடுத்து, காவேரியின் மூலமாகத் தான் அறிந்த எல்லா விஷயங்களையும் உரைத்தாள். காவேரியையும் அவ்விடத்திற்கு அழைத்தாள். காவேரி ஏதோ தீய காரியத்தைச் செய்யத் துணிந்து, செய்துவிட்டாளெனினும் இப்போது அவளுடைய வயிற்றில் திகில் பிடித்துக்கொண்டு வாட்டுகின்றது. அவளும் மிரள மிரள விழித்துக்கொண்டு நிற்கின்றுள்.

இந்த அநியாய வாலாற்றைக் கேட்டு ஆத்திரம் மிகுந்த நமது சுலோசனுவுக்கு அந்த காவேரியைப் பார்க்கும்போதே அடங்காத கோபம் மூண்டுவிட்டது. அவள் பல்லைக் கடித்துக்

வெகு ஸ்வாரஸ்யமாயும் ஆநந்தமாயும் ஒரு விஷயத்தை எழுதிக்கொண்டேவருகையில் பேனுவில் மை (இங்கி) ஆய்விடுவதானது, சமயத்தில் கழுத்தை யறுப்பதுபோல இருக்கிறது. வெகு அவசரமாக ஓர் இடத்திற்கு வண்டியில் செல்கையில் வழியில் ரயில்வே கேட் மூடப்பட்டுவிடுகிறது. இவையெல்லாம் மிகுந்த சங்கடத்தை விளைவிக்கின்றன.

கொண்டு "அடி கபடி! நீ என்னை வேண்டுமென்று இவ்விதம் செய்வதற்காகவா என் வீட்டிற்கு வெகு நேசபாவத்துடன் பேசிக்கொண்டு வந்தாய்? நீ அநியாயமான காரியத்தைச் செய்துவிட்டு ஜெயித்து விடுவாயா? நிரபராதியான எனக்குக் கடவுளும் துணைபுரியமாட்டார் என்று எண்ணினாயா? அடி! பொறாமை பிடித்த கள்ளி! பொறாமை வெள்ளத்தையுடைய உனக்குக் காவேரி என்கிற புனிதமான பெயரைச் சூட்டியிருக்கிறார்களே! சிச்சி! நீயா எனக்குச் சிநேகிதை! நீயா என்னை வஞ்சித்தனை!" என்று தனது ஆத்திரம் பொங்கக் கூறுவதைப் பிரேமாமணி தடுத்து "என் பிரிய சுலோசனா! ஆத்திரமுறாதே! அவரவர்களின் செய்கையின் பலன் அவரவர்களைத்தான் வந்து சாரும். உனது கணவனை ஒரே வழியாய்க் கடவுள் தன்னிடமழைத்துக்கொண்டார். இந்தக் காவேரி தடிச்சிறுக்கிக்கு, கல்லுபோலக் கணவன் இருந்தும் இவளுடைய துர்கடத்தையின் பயனால் தாய்வீட்டில் தள்ளிவிட்ட பவிஷை யாரும் அறியமாட்டார்கள் என்று எண்ணிவிட்டாள்போலிருக்கிறது. என்னுடைய பிராணநாதரும், இவளைக் கட்டிய கணவனும் நிரம்பவும் சிநேகிதர்கள் என்பதை இவள் அறியமாட்டாள். இவளுடைய சகல விசேஷமான வரலாறும் என் கையிலிருக்கின்றதென்பதை இவள் அறிந்திருந்தால் இத்தகைய குண்டுணிவேலையில் பிரவேசித்திருக்கமாட்டாள். இவள் தன்னுடைய யோக்கியதையைப்போலவே பிறருடையதும் என்று நினைத்துவிட்டாள் போலிருக்கிறது. சுலோசனா! கண்ணீர் விடாதே! நாங்கள் உயிருள்ளமட்டும் உன்னை ;எந்தக் கஷ்டத்திலும் கைவிடமாட்டோம். இந்த அற்பப் பெண்ணின் வார்த்தை உன்னை ஏதும் செய்யாது. இவளுடைய யோக்யதையை நான் வெளியிடாமலிருக்கும் பரியந்தம் இவளுக்கு க்ஷேமமென்று நினைக்கவேண்டும். இதற்கெல்லாம்

சில கற்றுக்குட்டிகள் 'யார் எந்த பெயர் வைத்து நாவல் எழுதுகிறார்கள், விஷயம் எவ்விதமிருக்கிறது?' என்பதைத் தெரிந்துகொண்டு அதேமாதிரி விஷயத்தையும் பெயரையும் தாங்கள் வைத்து நாவல் எழுதிவிடுகிறார்கள். இதனால் தாங்கள் அடைந்துவிட நினைக்கும் பயன் யாதோ அவர்களுக்குத்தான் தெரியவேண்டும்.

நீ கவலைகொள்ளவேண்டாம்'' என்று கூறித் தேற்றிவிட்டு, கமலா சனியை நோக்கி "தலைவி! தாங்களோ நன்ருகப் படித்துத் தேறிய அறிவாளி. நானே! தங்களிடம் பயின்ற மாணவி. இந்த சுலோசனு விடத்தில் தாங்கள் மிகவும் பிரியமாக இருந்தவற்றை மறந்து, இந்தக் கலகக்காரி கூறிய வார்த்தைகளை மதித்து, இவளை பொரு பொருட்டாக எடுத்துக்கொண்டு முன்பின் யோசியாமலும், தீர ஆராய்ந்து பார்க்காமலும் அத்தனை பெண்களின் முன்னிலையில் தாங்கள் கூறிய வார்த்தை எவ்விதமிருந்தது தெரியுமா? கேவலம் அனாதைப் பரதேசியாகிய பேதையின் மனம் அம்மொழிகளால் எத்தகைய வேதனையடைந்து தீய்ந்திருக்குமென்பதை யோசித்துப் பாருங்கள். மேலும், உடைக்காத கவரை உங்களிடம் கொடுத்த தாகச் சொன்னீர்களே! அந்த ஒரு செய்கையிலிருந்தே நீங்கள் ஒரு பெரிய விஷயத்தைத் தெரிந்துகொண்டிருக்கலாமே! சுலோசனு வுக்கு வந்த கவர் உடைக்காமல் எப்படி இவள் கரத்திற்கு எட்டிற்று என்கிற கேள்வியை நீங்கள் இந்தக் காவேரியிடத்தில் கேட்டீர்களா? இப்போது அதை முதலில் விசாரியுங்கள்'' என்ருள்.

உடனே கமலாசனி காவேரியை நோக்கி "கடிதம் உன் கரத் திற்கு எவ்வாறு வந்தது?'' என்று கேட்டாள். காவேரிக்கோ உண்மையாகவே மனதில் திகில் உதைக்கின்றது. கமலாசனி கேட்டவுடன் முன்னிலு மதிக பயத்துடன் தான் என்ன விதமாகப் பதில் கூறுவதென்று சிறிது தயங்கினுள். பிறகு பேசத் தொடங்கி "அந்தக் கவரும் மேஜைமேல் இருந்தது'' என்ருள்.

சுலோ:—ஏனடீ! இந்தக் கவரில் நேற்றைய தேதி போட்டிருக் கிறது. இதைத் தபால்காரன் என்னிடம் கொடுக்கவே இல்லை. அவ்வாறு கொடுத்திருப்பினும் நான் உடைத்துப் பார்க்காமல் வைத்திருப்பேனு! இதென்ன திருட்டுத்தனமடீ! உண்மையைக் கூறுகிருயா! உன் விஷயத்தை உடைக்கச் சொல்லட்டுமா?'' என்று

முக்கிய பண்டிகை, கல்யாணம், முதலிய நாட்களில் அசந்தர்ப்பமாகிவிட் டால் அப்போதவர்களடையும் விசனத்திற்கு நிகர் எதுவுமில்லை. பெண்மக்க ளுக்கே இது ஒரு சிறைபோலும்.

அதட்டிய தொனியால் கூறிக்கொண்டிருக்கையில், கமலாசனிக்கு ஒரு கடிதத்தைத் தபாற்காரன் கொண்டுவந்தான். அதே தபாற் காரன் சுலோசனுவின் வீட்டிற்கும் வருபவனாகையினால் சுலோசனு வெகு ஆத்திரத்துடன் தபாற்காரனை நோக்கி "ஐயா! இதோ இந்தக் கடிதத்தை நேற்றைய தினம் நீங்கள் யாரிடம் கொடுத் தீர்கள்?" என்று கேட்டாள்.

இதுகேட்ட தபாற்காரன், "அம்மா! இதென்ன இப்படிக் கேட்கிறீர்களே! நீங்கள் வாங்கிக்கொண்டு வரச் சொல்லியதாக இந்தம்மாள் என்னை நடு வழியிலேயே கேட்டு வாங்கிக் கொண்டு வந்தார்களே!" என்று அவன் கூறி முடிப்பதற்குள் சுலோ சனுவுக்கும் மற்றெல்லோருக்கும் சொல்ல முடியாத ஆச்சரியம் பொங்கிவிட்டது. "ஆ! ஆ! அப்படியா செய்தாள்" என்று மூக்கின் மீது விரலை வைக்கலானார்கள்.

காவேரிக்கோ தபால்காரனைப் பார்த்ததுமே இடி விழுந்தது போலிருந்தது. அவளால் நிற்கக் கூடமுடியாமல் உடல் நடுக்கம் உண்டாய்விட்டது. அவன் உண்மையை உரைத்துவிட்டதும் 'அகப்பட்டுக்கொண்டாரய்யா திம்மட்டி பட்டர்!' என்ற பழமொழிக் கிலக்காய் திருதிரு வென்று விழிக்க வாரம்பித்தாள். இவ ளுடைய இத்தகைய மாருட்டத்தைக் கண்ட எல்லோருக்கும் இவளிடத்தில் அடங்காத ஆத்திரம் உண்டாகிவிட்டது. பிரேமா மணி கமலாசனியை நோக்கிப் பேசத் தொடங்கி "தலைவி! எப்படி இருக்கிறது வேலை?" என்றாள்.

சுலோ:—(தபாற்காரனை நோக்கி) "ஐயா! இனி எனக்கு வரும் கடிதங்களை என் உத்தரவின்றி எவரிடமும் கொடுக்கவேண்டாம்" என்றாள். அவனும் "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

எல்லாப் பண்டிகைகளையும்விட ஸ்ரீஜயந்தி பண்டிகை மிகவும் விசேஷ மானது. கார்த்திகை ஓர் அழகானது. தீபாவளி ஓர் தனி ஆநந்தம் பயப்பது. பொங்கல் பண்டிகை மிகவும் சிறப்பு; மங்களகரம்; தனிக்கொண்டாட்டமா னது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனி ஆசாரணை.

கமலா:—காவேரி! நீ இப்படி செய்யலாமா? இந்தக் காரியம் எவ்வளவு கெட்டது. உன்னிடம் அகஸ்மாத்தாகக் கிடைத்த கடிதத்தைத் தான் காட்டினுய். இவ்விதமும் மோசம் செய்யலாமா?

காவேரி:—(சற்று தைரியத்துடன்) அம்மா! இதை நான் வாங்கிய தப்பிதம் இருக்கட்டும். சுலோசனுவின் நடத்தையும் இத்தகைய கடிதங்கள் வருவதும் சரிதானு! என்பதைக் கேளுங்கள்.

பிரேமாமணி:—அடீ! துஷ்டை! உன்னைக் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்காமல் அதிகப் பிரசங்கியாய்ப் பேசுகிருயா?

கமலா:—"அவள் நடத்தையைப் பற்றி அவளைக் கண்டிக்க எனக்குத் தெரியும். நீ சொல்வது அனுவசியம். உன் விஷயத்தைக் கேட்டால் அந்தமட்டில் பதில் கூறு. நீ செய்த வேலையே தப்பிதம். முதலில் நீ சுலோசனுவின் மீது கோள் மூட்டை கொண்டு வந்ததே மகா தவறுன காரியம்....உம், சரி, உன்னைப் பிறகு பார்த்துக்கொள்கிறேன். நீ வெளியே போ" என்று அனுப்பிவிட்டு, பிறகு சுலோசனுவை நோக்கி "சுலோசனு! இதென்ன கடிதங்கள். இதன் தகவல் தான் என்ன. சினிமா விஷயங்கள் என்ன. இவைகளை விளங்க விஸ்தாரமாகக் கூறு.

பிரேமாமணி:—தலைவி! எவ்விஷயமாயினும் என்னைக்கேளுங்கள்; அன்றி சரோஜனியைக் கேளுங்கள். அவள் அறியாப் பேதை. அவளை இவ் விஷயங்களைக் கேட்டால்; அந்த வருத்தம் தாங்காது மயக்கம் வந்து விழுந்துவிடுகிருள். கடவுளை நிந்திப்பதிலென்ன! நாம் செய்த கர்மத்திற்குப் பிறரைப் பழிப்பது மிகவும் பாபம். சகல விதத்திலும் சுலோசனுவிற்கு நிகர் யாரு மில்லை என்கிற

மதுவெறியை யொழிப்பதற்கு அநேகர் கிளம்பி இருக்கிருர்கள். மதவெறியை அகற்றவும் வழி செய்கிருர்கள். 'நான்'' என்கிற அகம் பாவத்துடன் பதவிவெறி பிடித்துள்ள பிரபுக்களின் வெறியோ விஷம் ஏறுவதுபோல விருத்தியாகிக்கொண்டே வருகிறது. இதற்குக் கேள்வி முறையே இல்லை. இது கலியின் கூற்ரே!

பட்டத்தை அளித்துவிட்டு, கடைசியில் அவளைப் போன்ற பாபிஷ்டி யாரும் இல்லையென்று கூறும்படியாகக் கடவுள் செய்து விட்டார். எந்த வழியில் பார்த்தாலும் அவளுக்கு ஆபத்தே யன்றி ஆனந்த மில்லை. பாழாய்ப் போன எழில் அவளிடம் அடிமையாகி இருப்பதே முதல் சத்ரு. அவளை அடைவதற்காகத் துஷ்டர்கள் சேர்ந்து வலை வீசும் விதம் ஒன்றிரண்டல்ல. அவை களில் இக் கடிதங்களும் சில. தினந்தோறும் வரும் அநாமதேயக் கடிதங்களை நானறிவேன். அவ்வளவெதற்கு? "உங்கள் சினே கிதையை எனக்கு மணம் புரிவியுங்கள். அதற்கான ஏற்பாட்டை எங்களுக்குச் செய்தால் உங்களுக்கு மிகுந்த புண்ணிய முண்டு. அதோடு உங்களுக்கும் லாபமுண்டு." என்று ஏதேதோ தாறு மாறான கடிதங்கள் எங்களுக்குக் கூட வந்தன. அவைகளை நான் சுலோசனாவிடமும் காட்டவில்லை. அதனால் மனங் கலங்குவாளே என்கிற யோசனையினால் பேசாமலிருந்துவிட்டேன். அவைகளை நான் ஜாக்ரதையாக வைத்திருக்கிறேன். வேண்டுமானால் காட்டு கிறேன். அத்தகைய சோதாக்களே வேண்டுமென்று அநா மதேயக் கடிதங்கள் எழுதி யிருக்கிறார்கள். இதில் சிறிதும் சந்தேகமில்லை. தாங்கள் அந்த அபலைக்கு அன்னையா யிருப் பது போக, இன்னலுக் கிலக்காக்கி இப்படித் தவிக்கச் செய்தால் என்னதான் செய்வாள். இப் பெண்ணரசி, உற்றாற்று, பெற் றோற்று, மற்றதுமற்று கற்ற கல்வியை உற்ற துணை யாகக் கொண்டு தன் காலத்தைக் கடத்த எண்ணியுள்ள இவளை நீங்கள் கிஞ்சித்தும் யோசியாமல் சஞ்சலத்திற்குள்ளாக்கி விடத் துணிகின்றீர்களா? இனியேனும் இவளுடைய பரிசுத்தத் தன் மையை உணர்ந்துகொண்டு இவள் விஷயத்தை இம்மட்டோடு

ஒரு உத்யோக சாலையின் தலைமை வகிக்கும் மனிதர்கள் தாங்கள் வெகு நியாயமாயும் யோக்யர்களாயும் நடப்பதாக நடிக்கிறார்கள்; சொல்லிக்கொள் கிறார்கள். ஆனால் ஆபீஸில் நன்றாக உழைப்பவர்களைக் கவனிக்கவும், வேலை யைச் சமமாக எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து உழைப்பாளிகளை உற்சாகப் படுத்தவும் வேண்டுமென்பது அவர்கள் நினைவிற்கு வருவதில்லை. இது எந்த தர்ம நியாயமோ?

அடக்கிவிடுங்கள்; மணி யடிக்கும் நேரமாகிவிட்டது. போவோம்" என்றாள்.

கமலாசனியின் இரகசியம் பிரேமாமணியினிடத்தில் அகப்பட்டிருப்பதால், அவளிடத்தில் காவேரிதன் பதட்டத்தினால் கடிதத்தை மோசமாக வாங்கிக்கொண்டு வந்துவிட்டதனால், அவளிடத்தில் வெறுப்பும் பயமும் ஒன்றாகக் கூடிவிட்டன. அதன்மேல் சுலோசனாவின் இரு கரங்களையும் பற்றிக்கொண்டு, "அன்பான சுலோசனா! என்னை மன்னிக்க வேண்டுகிறேன். நானும் ஏதோ புத்தியின்மையினால் அந்தக் கடிதத்தை நம்பிவிட்டேன். இனிமேல் அவ்விதம் எதுவும் நேராது. நீ என்னை வித்பாசமாக எண்ணாதே! நாளைய தின வகுப்புப்பரீக்ஷையில் உனக்கு இரட்டை வகுப்பு மேலாக மாற்ற நினைத்திருக்கிறேன். அந்தப்படியே செய்துவிடுகிறேன். நீ இவைகளை மனதில் வைக்காதே! பிரேமாமணி! நீயும் என்னை மன்னிக்கவேண்டும். வா; வகுப்புக்குப் போவோம்" என்றாள். பிறகு பிரேமாமணியும் சரோஜனியும் சுலோசனாவுக்கு அநேக தேறுதல் வார்த்தைகள் கூறிவிட்டுத் தம்தம் இடத்திற்குச் சென்றமர்ந்தார்கள்.

கலாசாலையிலுள்ள மற்ற பெண்கள் எல்லோரும் விஷயம் இன்னதென்று விளங்காமல் விழித்தார்கள். சுலோசனாவின்மீது ஏதோ ஒருவிதமான குற்றம் இருப்பதாக மட்டும் அறிந்துகொண்டார்கள். அதைக் கேட்கவும் பயந்து ஒருவருக்கொருவர் கூடிக் கூடிப் பேசிக்கொண்டார்கள்.

நமது சுலோசனா அன்று முற்றும் மனமே சரியாயில்லாமல் தவித்தாள். தன் பாடங்களைச் சரிவரப் படித்துவிட்டு மாலையில் தன் வீடு வந்து சேர்ந்தாள். அவளுடைய மனம் எப்போதும் விசனக் கடலில் ஆழ்ந்துள்ளது. அதோடு இன்று நடந்த சம்பவத்

இக்காலத்தில் படித்த பட்டதாரிகள் வேலைக்காகத் திண்டாடுகின்றார்கள். ஆனால் சில ஆபீஸில் ஒன்றும் கையாலாகாத சோம்பேறி வேலையாளின் வருகைக்காக வேலை காத்துக்கொண்டிருக்கிறது. இதுவும் ஒரு வேடிக்கையல்லவா?

தினால் அவளடைந்த வருத்தமும் சேர்ந்துகொள்ள "ஐயோ! என்ன உலகம்! என்ன மனிதர்கள்! எனக்கு சிநேகிதையைப் போலவே நடித்து என் தலைக்குக் கொள்ளியைத் தேடிவிட்டாளே! இக்காலத்தில் ஒருவரை யொருவர் வாய்ப் பேச்சளவிற்கூட நம்புவதற்கில்லையே. என்ன க்ரூர எண்ணம். அன்று அந்தக் கடிதத்தை உடைத்துப் படித்துக்கொண்டே இருக்கையில் யாரோ வந்துவிட்டதால் அதைப் புத்தகத்தின் மத்தியில் வைத்தேன். அந்தக் காரியம் இந்தவிதமாக முடிந்தது. அந்த சமயத்தில் என்னருமை பிரேமாமணி வராவிட்டால் என் கதி எவ்வித நகைப்பிற் கிடமாகி இருக்குமோ! உம்....கடவுள் இதுவரையிலாவது என்னை விடுவித்ததே பெரிய காரியம்" என்று யோசித்துக்கொண்டு சோபாவில் உட்கார்ந்திருக்கையில், அங்கு சரோஜனி, பிரேமாமணி இருவரும் வந்தார்கள். சுலோசனாவின் இரு புறங்களிலும் இருவரும் அமர்ந்து அவளை அணைத்தவாறு "என்ன சுலோசனா!. ஏதோ பெரிய யோசனை செய்கிறாய்!" என்றார்கள்.

சுலோ:—எனக்கு யோசனை இல்லாத சமயமும் உண்டா! நான் பிறந்ததே யோசனை செய்து பொழுதைக் கழிப்பதற்காயிற்று. மணி! இன்று நீ இல்லாமலிருந்தால் என் கதி என்ன விதமாக முடிந்திருக்குமோ என்று எண்ணினேன். அதைத் தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

சரோஜனி:—சுலோசனா! உன்னைக் கமலாசனி அவ்வாறு கூறியதும் என்மனம் எவ்விதமிருந்தது தெரியுமா? என்னால் தாங்கக் கூடாத கோபமும் துக்கமும் வந்துவிட்டது. என்ன விதமான விபத்து வந்தாலும் வரட்டும். நேரே அதிகாரியிடம் சென்று விடலாமா என்றும் யோசித்தேன்.

"யார் நன்றாக உழைக்கக் கூடிய திறமை யுள்ளவர்கள்? யார் திறமை யற்றவர்கள்?' என்பதைக் கவனியாது, தலைமை வகித்து விட்ட அகம்பாவத்தினால் அதிகார தோரணையை ஆடம்பரமாகக் காட்டுவதும், தாக்ஷண்யத்திற்காக உபயோகமற்றவனை வேலைக்கமர்த்தி திறமைசாலிகளான மற்றவர் பிராணனை வாங்குவதுமான லீலைகளைச் சில ஆபீஸில் தலைமைப் பதவி வகிக்கும் பிரபுக்கள் புரிகின்றார்கள்.

16 MAR 1931

பிரேமாமணி:—சுலோசனா! நான் சொல்வதற்குக் கோபிக்காதே! கடிதங்களின் விஷயமான சகல அனுபவங்களையும் பிரஜாநுகூலன் பத்திரிகையில் வெளியிட்டிருந்தவற்றை நான் உனக்குக் கொடுத்தேன். நீயும் படித்தாயே. அதனைப் படித்தறிந்த பிறகாவது அவ் விஷயத்தில் ஜாக்கிரதையாக விருக்கவேண்டாமா! பாட புத்தகத்தின் மத்தியில் இத்தகைய அனாமதேயக் கடிதங்களிருப்பது தவறல்லவா! இத்தகைய கடிதங்களை முதலில் வைத்துக்கொள்வதே பிசகு. உனக்குத் தீமை செய்வதற்கு அநேகர் சமயம் பார்த்துக்கொண்டிருக்கின்றார்களே யன்றி, நன்மை செய்வதற்கு ஒருவரு மில்லை. வேண்டுமென்று எந்த சோதாத் தடியர்களோ உனக்கு இவ்விதமான கடிதம் எழுதுவதை நீ உடனே நெருப்பிட்டுப் பொசுக்கிவிட வேண்டாமா? இது வந்த செய்தியே தெரியாதவாறு நீ நடக்கவேண்டும். உனக்கு முக்கியமான கடிதங்களாயின் அவற்றை ஜாக்ரதையாகப் படித்துப் பெட்டியில் வைத்துக்கொள். இத்தகைய அனாவசிய கடிதங்கள் எதற்காக உன்னிடம் இருக்க வேண்டும்? இவை பிறர் கையிலகப்படுவதால் எத்தகைய ஆபத்து பார்த்தனையா? அதற்கேன் இடம் கொடுக்கவேண்டும்? நீயோ பல விதத்திலும் திக்கற்ற அனாதை. உன்னை ஆதரிக்கவோ, வரும் ஆபத்துக்களில் காக்கவோ ஒரு மனிதருமில்லை. ஆகையினால் உன்னை இத்தகைய இடர்கள் தொடர்வது சகஜந்தான். உன்னால் கூடிய வரையில் நீ இவ்வித விபத்துக்களுக்கு இடங் கொடுக்காமல் இருப்பது நன்று. இக்காலத்திற்கேற்ப அநீதிகள் தான் அதிகரிக்கின்றன. அந்தக் கமாலசனியின் முக்கியமான விஷயம் ;என்னிடமிருப்பதால் அவள் என்னைக் கண்டு நடுங்கிவிட்டாள். அவளுடைய முட்டாள்தனத்தைப் பார்த்தாயா? காவேரியின் விஷயத்திலிருந்த குற்றங்களைக் கவனிக்காமலே விட்டுவிட்டாள். காவேரி உன் வீட்டிற்கு வந்த காரணமே 'உனக்கு ஏதேனும்

தன்மீது குற்றமில்லாதது போல நடக்கும் சில சுயநலப்புலிகள் பிறர் மீது மட்டும் சதா குற்றம் கண்டுபிடித்துக்கொண்டே இருக்கும் குறும்பை ஏனோ விடுவதில்லை. தான் அகப்படாதிருப்பதுபோல பிறரைக் காட்டிக் கொடாது இருக்கலாகாதா?

தீங்கு செய்வதற்கு ஆதாரம் கிடைக்குமா' என்ற யோசனையுடன் தான் என்பதைப் பின்னர் நடந்த விஷயங்களினல் நன்கு தெளியலாம். சினிமாக்காரன் கொடுத்த கார்டைக் கிழித்தெறியாது வைப்பாயா? இனிமேல் இப்படி வரும் கடிதங்களை நீ உடனே கிழித்தெறிந்துவிடு. கடிதங்கள் பிறர் கைவசம் அகப்பட்டுவிட்டால் அதை வைத்துக்கொண்டு உனக்குத் தீங்கு செய்யவோ, உன்னை மிரட்டிப் பயமுறுத்தவோ அதனல் உனக்கு எத்தனை கேடுகள் நேரக்கூடுமோ அத்தனையும் செய்யவோ உன் விரோதிகள் முயல்வார்கள். பாழுங் கடிதத்தினல் உண்டாகும் தீமைகள் அநந்தம். இவ்விஷயத்தில் நன்ருகப்பட்டு அறிந்தவர்களுக்குத்தான் இதன் அனுபவம் விளங்கும். முதலில் சிநேகத்தை வளர்க்கும்; பிறகு சிதைக்கும்; அதன்மேல் பகையைக் கிளப்பும்; பக்ஷபாதத்தைக் காட்டும். குற்றத்தைச் சாட்டும்; குணத்தைப்போக்கும். தூஷணைக்கு ஆளாக்கும்; கடைசியில் உயிரையே வாங்கியும்விடும். சிநேகமாகவிருக்கும் வரையில் அன்யோன்யபாவமாய் உயிருக்குயிரான சிநேகிதராகவோ, பெற்ருேராகவோ, சோதரபாவமாகவோ வரையும் கடிதங்களெல்லாம் நமது போதாக் காலக் கொடுமை வந்துற்ற காலத்தில் அந்த இனித்த கடிதமே—தித்தித்த கடிதமே—பிரியத்தை வளர்த்த;கடிதமே—ஆழமான அன்பை உண்டாக்கிய கடிதமே—தினங் கண்டுகளித்து மகிழ்ந்த கடிதமே—பிறகு அத்தனைக்கும் நேர்!எதிரிடையாக மாறி நமது மனத்தை வேகவைத்து—கண்ணில் இரத்தத்தைக் கசிவித்து—சதா கவலைக்கிலக்காகச் செய்து நகை முகத்தில்:விசாரத்தை உண்டாக்கி, தேகம் மெலிந்து, ஆவி சோர்ந்து, அன்னம் வெறுத்து, முன்னம் தவித்து, பலம் குன்றி, நிலை மாறி, கடுமையான நோயினல் பீடிக்கச்செய்து கடைசியில் உயிருக்கே!கேடு விளைவிக்கவும் முற்பட்டுவிடுகிறது. சிலருக்கு மேற்குறித்தவைகளால் உயிரும் போய்விடுகிறது. இந்தவிதமான அனுபவம் உலகில் பிரத்யக்ஷமாக நடக்கின்றது. இவைகளை நான் கண்கூடாகக் கண்டதால் உனக்குக் கூறுகிறேன். கடிதம் செய்யும்

தனுக்காகப் பேசுகிறவர்களையே யாரும் நம்பிவிடுகிருர்கள். "எதார்த்தவாதி வெகுஜன விரோதி" என்பது நிஜமாகிவிடுகின்றது.

கூற ஒன்றிரண்டல்ல. சிநேகமான—அன்பான—கடிதங்களே அந்தக் கதியை அடைகின்றனவென்றால் இத்தகைய அநியாய கடிதங்களின் கதியைக் கூறவும் வேண்டுமோ! இவைகளை எல்லாம் இனிமேல் கிழித்துவிடு. வைக்காதே. உனக்கொரு கண்டம் தீர்ந்ததென்று எண்ணு. நீ மிகவும் பேதை. அதிலும் உலகானுபவம் ஒன்றையுமறியாதவள். ஆகையினால் ஜாக்ரதையாக நடந்துகொண்டால்தான் இக்காலத்தில் பிழைக்கலாம். உன்னுடைய ரூபமும், குணமும், சங்கீதமும், அறிவும், ;ஒன்றுகூடி; உனக்கே சத்ருவாக அமைந்திருக்கின்றன. காப்பதற்கு தனக்கென்று நாதனிருக்கின்றவர்களுக்கே தீராத துயரமெல்லாம் சம்பவிக்கின்றன; நாதனற்ற நங்கையாகிய உனக்கு ஆபத்து வருவதைக் கேட்கவேண்டுமோ! உனக்கு எந்தசமயம் எத்தகைய கஷ்டம்நேரிடினும் அவைகளைச் சற்றும் வித்யாசமின்றி எங்களிடம்தெரிவித்தால்;உனக்கு எங்களாலாகிய உதவியைச் செய்யத் தயாராக இருக்கின்றோம்; என் பர்த்தாவுக்கு உன்மீதுள்ள இரக்கமும், பச்சாத்தாபமும் கொஞ்சநஞ்சமன்று. இதை விகற்பமாக எண்ணிவிடாதே. உனக்கு உன் கோபி எவ்விதமோ அவ்விதமே என் பர்த்தாவையும் நீ நினைக்கலாம். இனி இத்தகைய ஆபத்துக்களில் சிக்காதே. காவேரிபோன்ற துஷ்டைகளை வீட்டிற்குள் சேர்க்காதே. கண்டிப்பாக விலக்கிவிடு. ஏதேனும் தெரியவேண்டியிருந்தால் என்னிடமோ சரோஜனியிடமோ கேட்டுத் தெரிந்துகொள். சுலோசனா! நான் சென்றுவரட்டுமா? சரோஜனி! நீயும் வருகிறாயா? இங்கேயே இருக்கிறாயா?

சுலோ—என் ப்ரியமணி! உன் மொழிகளைப் பொன்போன்ற மொழிகளாக ஏற்றுக்கொண்டேன். என்னுடைய தலைவிதி என்னை எத்தனைவிதத்தில் பரிசோதிக்கின்றதோ அவையனைத்தும் நடக்கின்றன. நான் பிறந்த வேளை அப்படிப்பட்டது; என்ன செய்யலாம். சிநேகிதமாக நடித்தவர்கள் இவ்விதம் சத்ருக்களாக வேலை செய்வார்களென்று நான் நினைக்கவேயில்லை. நமக்கு அந்தரங்க

கலிகாலத்தில் கபடமும், கள்ளத்தனமுமே மிகுந்துவிட்டன. கர்மத்தின் முடிவுபோலக் காரியத்தின் முடிவு. காலத்தின் போக்கைப்போல சீலமும் கோலமும் மாறுகின்றன.

மானவர்களென்று எண்ணி நம்பியதற்கு மோசம் உடனே வந்து விட்டது.

பிரேமா—ஐயோ! இக்காலம் கலியல்லவா! சிநேகிதர்களை நன்ருக அறிந்து பழகுவது என்பதே ஓர் தனிப் படிப்பாகும். அவ்வாறு நமக்கு இவர்கள்தான் கடைசிவரையில் அழியாத சிநேகிதர்கள் என்று நாம் நம்பிப் பழகினல்கூட, நமது கெட்டகாலத்தினல் அவர்களையும் நாம் பிரியும்படியான சந்தர்ப்பம் நேர்ந்துவிடுகிறது. பிரியாத—என்றும் ஒரே மாதிரியான நேசபாவத்துடன் இருக்கும் சிநேகிதர் உலகில் நூற்றிற்கு ஒருவர் தேறுவதும் துர்லபமென்றே கூறுவேன். சிலகாலம் சிநேகமாகவிருந்தவர்கள், சிலகாலம் விரோதிகளாக விருக்கலாம்; அவர்களே மீண்டும் சேரலாம்; பின்னும் பிரியலாம். இவை யாவும் பிரபஞ்ச விலாசத்தின் கூற்று. இவைகளை ஒரு நிலைப்பட்டனவென்று கூறச் சாத்தியமன்று. யாருக்குத் திருடமான சித்தமும், உறுதியான எண்ணமும் ஆழ்ந்த வாஞ்சையும் இருக்கின்றதோ அவர்களின் சிநேகந்தான் நிலைத்ததாகவிருக்கலாம். அதையும் திட்டமாகக் கூறமுடியாது. மனதில் ஒரு எண்ணத்தை மறைத்துக்கொண்டு சிநேகம் செய்வோருடைய நட்பு வெகு சுலபத்தில் அழிந்துவிடுகின்றது. இது கண் கண்ட அநுபவம். இப்போது நாம் மூவரும் உயிருக்குயிராக இருக்கிறோம். நம்முடைய சிநேகம் என்றும் இவ்விதமே நிலைத்திருக்கும் என்று எவ்விதம் நம்புவது? இதைச் சிதைத்துவிடுவதற்கு எத்தனை சத்ருக்கள் தோன்றுவார்களோ! அன்றி எந்தவிதமான காரணங்கள் புதிதாக முளைக்குமோ! நாம் எதைத்தான் திட்டமாகக் கூறமுடியும்? மனஸ்தாபம் என்ற விஷயத்தை உண்டாக்குவதற்கு எவ்வாருயினும் காரணபூதம் ஒன்று ஏற்பட்டுவிடும் உலகத்தின் தன்மையை உணரவல்லார் யாருமில்லை. ஆகையினல்

"என் காதலனை நினைத்துவிட்டால் எனக்குப் பசியும் கிடையாது. நிசியில் நித்திரையுமில்லை. எந்த விஷயத்திலும் அசுசி ஏற்பட்டுவிடுகின்றது. ஏக்கமே என்னைத் தாக்கி ஊக்கமற்ற யாக்கையாக்கிவிடுகின்றதே! என்ன செய்வேன்? என்று காணுவேன் என் நாதனை?" என்கிருள் ஒரு உண்மைக் காதலி.

எல்லோரும் தம்மாலியன்றமட்டும் ஜாக்கிரதையாய் சுத்தமான சிநேகத்துடன், களங்கமற்ற மனத்தினராய் இருக்கவேண்டும். சுலோசனு! இன்று உன்னைக்காட்டிலும் எனக்குயிரான பொருள் வேறு எதுவுமில்லை யென்றும், உன்னை நான் காப்பாற்றுகிறேன் என்றும் இப்போதிருக்கும் என் நிலைமையில் தடபுடலாகக் கூறிவிடலாம். அவ்வாறே சில காலம் செய்யலாம். காலச்சக்கரம் மாறுகின்ற சமயத்தில் என் மூளைச் சக்கரமும் மாறுமல்லவா! அப்போது 'உண்மையில் சுலோசனு இத்தகையவள்தானே என்னவோ? அவளுடைய நடத்தை துன்மார்க்கமானதுதானே என்னவோ! இக்கடிதங்களெல்லாம் உண்மையானவைதானே என்னவோ!' என்று இப்பேர்க்கொத்த சந்தேகப் பிசாசுகள் என்னையும் பிடித்துப் பீடிக்கும். அப்போது நானே உனக்குப் பகையாக மாறினும் மாறிவிடுவேன். மனிதருடைய மனத்தைமட்டும் நம்பலாகாது. மிருந்த மர்க்கட சுபாவம் உடையது. உறுதி அதற்கு நிலைப்பது கஷ்டம். அவ்வாறு மாறுபடாத மனஉறுதியுடைய மனிதர் ஒருவரின் துணை இருப்பதும் சரி. மற்றவர்களுடைய துணை ஆயிரமிருப்பதும் சரி. சுலோசனு! உன்னிடத்தில் எனக்குள்ள கரைகடந்த வாஞ்சையினுலும், உலகத்தின் அனுபவத்தைக் கண்டறிந்திருப்பதனுலும் நான் உனக்கு இந்த விஷயங்களையெல்லாம் உள்ளது உள்ளவாறு எடுத்துரைக்கின்றேன். இதனுலேயே நான் மாறிவிடுவேன் என்று எண்ணிவிடாதே. என்னுயிருள்ளளவும் மாறமாட்டேனென்கிற மிக்க தீரமான உறுதியுடனும், திடசித்தத்துடனும் நான் இருக்கின்றேன்; கடவுள்; இருக்கிருர்; நீ எதற்கும் பயப்படாதே. நீ சதா கவலைப்பட்டுக்கொண்டேயிருந்தால் உன் மூளை தான் கெட்டுவிடும். ஆகையினுல், உனது பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய பாடங்களைப் படிக்கும் நேரத்தைத் தவிர மற்ற வேளைகளில் பகவந்நாம பக்தி நிறைந்த சங்கீதத்தைப் பாடி, உன் மனத்தைச் சற்று சாந்தி செய்து

என் கண்ணைத் திறந்தாலும் என் அன்பரின் உருவமே; என் கண்ணை மூடினுலும் என் ஆருயிரின் உருவமே. அவர் என் அகத்தில் சதா தோன்றி எனக்குக் காட்சி கொடுக்கின்ருர். அவர் நினைவற்ற நேரத்தைக் காணவில்லையே! அவருடன் என்று பழையபடி பேசுவேன்? (T.P.B.)

கொள். வீணை, பிடில், ஹார்மோனியம் முதலான அரிய வாத்தியங்களினாலோ அல்லது வாய்ப்பாட்டினாலோ கானம் செய்துகொண்டிரு. சங்கீதம் அளிக்கும் சாந்தி வேறு எதுவும் அளிக்காது. மனத்திற்கும் ஆனந்தம். செவிக்கும் இனிமை. ஆத்மாவிற்கு சுத்தியும் மோக்ஷமும் அளிக்கும். ஆகையினால் அதை துணையாகக் கொள். பஜனை செய்த புண்ணியத்துடன், கடவுளும் மனமிரங்கிக் கருணைகூர்ந்து உன் மனோரதம் யாதாயிருந்தாலும் பூர்த்தி செய்விப்பார். உன் கோரிக்கை நிறைவேறும். பக்தி உதிக்கும்; மன அமைதி ஏற்படும். சாந்தம் தானே உதிக்கும். சங்கீதத்தில் பாண்டித்தியமும் ஏற்படும். உன்னுடைய பொழுதும் நல்வழியில் கழியும். இத்தனை நலங்களையும் தன்னகத்தேகொண்டுள்ள சங்கீதத்திற்கு மிஞ்சியது எதுவுமில்லை. இது என்னுடைய சொந்த அனுபவம். சங்கீதமே எனக்குப் பெருத்த ஔஷதம். எனக்கு தேக அசௌக்கியம் ஏற்படும் காலங்களிற்கூட என்னால் பாட முடியாவிட்டால் பிறரைப் பாடச்செய்து கேட்பது வழக்கம். அதனால் எனக்குள்ள பிணி சற்று தணிந்திருக்கும். என்னுடைய மனமும் நிம்மதியாகவிருக்கும். சங்கீதத்தின் மகிமையைக் கூறத் தரமே இல்லை. சுலோசனா! எனக்கு நேரமாயிற்று. நான் சென்று வருகிறேன். ஜாக்ரதையாக இரு.

சரோ:—மணீ! நானும் வருகிறேன். மூவருமாகப் போய் ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு வரலாமா! பிறகு வீட்டிற்குப் போகலாம்.

சுலோ:—சரோஜனி! நானே சொல்ல நினைத்தேன். நீயே சொல்லிவிட்டாய்! வா செல்வோம். என்ன மணீ! போகலாமா!

பிரேமாமணி "சரி வாருங்கள்" என்று கூற, கோகிலாதனையும் அழைத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு வீடு திரும்பினார்கள். அங்கு இவர்களைச்

என் அன்பான காதலரைக் காணவும், கண்டு பேசவும், பேசி மகிழவும் பாக்கியம் என்று கிடைக்கும். அவருடைய நிஜத் தோற்றத்தைப் புறக் கண்ணால் என்று காண்பேன்?" (T. P. B.)

சுற்றி பலேர்த சோதாக்களுக்குக் கணக்கில்லே. அவர்களேத் தலே நிமிர்ந்தும் பார்க்காமல் நேரே வீடு வந்து சேர்ந்து மூவரும் தத்தம் இருப்பிடம் சென்றூர்கள். பிறகு சுலோசனு வழக்கம் போல நூல் நூற்க, கோபிநாதன் "அக்கா! நாம் இதுவரையில் நூற்றுள்ள நூலேயெல்லாம் சேர்த்துக் காங்கிரஸ் ஆபீசுக்கு அனுப்பிவிடலாமா" என்றான்.

சுலோ:—"கோபி! நான் காங்கிரஸ் ஆபீசுக்கு அனுப்பும் நோக்கத்துடன் நூல் நூற்கவில்லே. வருகிற தீபாவளிக்கு நம் கையினுல் நூற்ற நூலேக்கொண்டு ஒரு கதர் வேஷ்டி நெய்து நீ கட்டிக் கொள்வதற்காகவே நூற்கிறேன். வீதியில் ஏதோ தமுக்குத் தட்டும் ஓசை கேட்கிறதே! என்ன பார்" என்றாள். உடனே கோபிநாதன் எழுந்து ஓடினுன். மனதில் பற்பல எண்ணங்கள் ஆழ் கடலிற்றேன்றும் அலேகள் போல ஒன்றின் பின்னென்றுகத் தோன்ற "சர்க்கா' வில் நூற்றுக்கொண்டே சுலோசனு வீற்றிருந்தாள்.

5-வது அதிகாரம்

புதிய உறவு—பதமற்ற மணம்

சுலோசனுவால் அனுப்பப்பட்ட கோபிநாதன் திரும்பி வந்து "அக்கா! நாளேய தினம் மாலேயில் காங்கிரஸ்காரர்களின் பொதுக் கூட்ட மொன்று நடைபெறப் போகின்றதாம். அதற்காகத் தமுக்குத் தட்டுகிறுன் நாம் நாளேய தினம் அங்குச் சென்று வரலாமா?" என்றான். அதற்கு சுலோசனு தலேயசைத்தாள். மறுநாள் சரோஜனி, பிரேமாமணி

எனக்கு இவ்வுலகில் இருவரே உயிர் நிலே. ஒருவர் என் காதல் தெய்வம். மற்றெருவர் என்னுருயிர்த் தோழி. அவ்விருவரையும் என்றும் பிரியாதிருந்தால் அதுவே எனக்குப் போதும். (R. S. A.)

சுலோசனா, கோபிநாதன், பிரேமாமணியின் பர்த்தா, சரோஜனியின் பர்த்தா ஆகிய எல்லோருமாக அக் கூட்டத்திற்குப் போய்க் கேட்டு கூட்டம் கலைந்தபிறகு வீட்டிற்குத் திரும்பினார்கள். அதன் பிறகு சுலோசனாவுக்குக் கமலாசனி தெரிவித்தது போல மேல் வகுப்பிற்குப் 'பிரமோஷன்' ஆயிற்று. 'பிரமோஷ' னாகிய பின்னர் முன்னிலும் அதிக ஊக்கத்துடன் படித்து மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் முதன்மையாகத் தேறிவிட்டாள். அப்போதும் அவளுக்கு வரும் அனாமதேயக் கடிதங்களுக்குக் குறைவில்லை. மணி கூறியது போல அக் கடிதங்களை அப்போதைக் கப்போது தீயிட்டுவிட்டாள். காலேஜில் எப். ஏ., (F. A.,) வகுப்பில் சேர்ந்தாள். அவ்வாறு சேர்ந்து படிக்கும் நாட்களில் அவளுடைய மனதில் அவளையறியாமல் ஓர் கவலை மட்டும் உண்டாகி வளர்ந்துகொண்டே இருந்தது. அதன் காரணத்தை யறியக் கூடாமல் தன்போக்காகத் தனது வேலையைக் கவனித்து வந்தாள். அப்போது ஒருநாள் நாம் முன்னர் குறிப்பிட்டவாறு விமலநாதனால் அனுப்பப்பட்ட மஞ்சள் தடவிய கல்யாணக் கடிதமொன்று சுலோசனாவுக்கு வந்தது.

அதைக் கண்ட சுலோசனா, "இதென்ன நமக்குக் கல்யாண கடிதம் எங்கிருந்து வந்தது? யாரிட மிருந்து வந்திருக்கலாம்" என்று யோசித்தவாறு அதை உடைத்துப் பார்த்தாள். அதில் உள்ள எழுத்துக்கள் தான் ஏற்கனவே பார்த்தது போல விருக்கக் கண்டு, அதிக ஆச்சரிய மடைந்து அதைப் படிக்கலானாள்.

"ஸ்ரீமதி சுலோசனாவுக்கு அநேக ஆசீர்வாதம்! இவ்விடம் க்ஷேமம். அவ்விடத்தில் உங்கள் க்ஷேமத்தைப் பற்றி எழுதவும். இக் கடிதத்தை நான் தனித்த ஹோதாவில் எழுதவில்லை. என்னுடைய தாயாரின் உத்தரவின்படி எழுது

என் காதலர் கருப்பாயினும் அவருடைய கம்பீரத்திற்கும் அழகிற்கும் வேறு யாரும் ஈடாக எனக்குத் தோன்றவில்லை. அவருடைய முகத்தின் வசீகரமே ஓர் தனித்த சோபை. (T. P. B.)

கிறேன். திடீரென்று இதைக் கண்டு நீ ஐயங் கொள்ளலாம். இதுவும் ஒரு கால வித்தியாசம் என்னருமை சுலோசனு! நான் என் மனக்கோட்டையில் புதைத்து வைத்திருக்கும் பொக்கிஷத்தை எந்தக் கள்வராலும் அபகரிக்க வியலாது; என்னைப் படைத்த கடவுளாலும் அப்புறப் படுத்த முடியாது; சஞ்சிதமோ, பிராரப்தமோ, அன்றி எந்த ஜன்ம பாபமோ, எவரிட்ட சாபமோ, என் கோரிக்கை ஈடேறுமல் பாழாய் விட்டது. இந்த விஷயத்தை உனக்கு எழுதுவதற்கு எனக்கு மிகுந்த துக்கமாகவே இருக்கிறது. எனினும் என் தலைவிதி இது. திரிந்த பாலைத் திருந்தச் செய்வது எப்படி கடினமோ அவ்வாறே யாவும் நிகழ்ந்துவிட்டன. நான் பெற்றோருக்குள் அடங்கியவன்; என் பிதாவான போலீஸ் புலியின் காரியங்களால்! என் அறிவின்றி இசைகேடாக முடிந்துவிட்டது. இனிமேல் ஏதும் செய்வதற்கில்லை. எனக்குக் கல்யாணமென்ற சடங்கை இந்த மாதம் 15-ம் தேதியில் நடத்தப்போகிறார்களாம். எனக்கு அது விஷயத்தில் மனம் எவ்விதமிருக்கின்றதென்பதைக் கையிலுள்ள பொருளாயின் உடைத்துக் காட்டுவேன். என்னிதயத்தில் அழுந்திக்கிடக்கும்பொருளை எவ்விதம் அப்படி விண்டு காட்ட முடியும்? சுலோசனு! நீ பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறியதை நான் பத்திரிகைகளில் பார்த்து பரமானந்தமடைந்தேன். இதுகாறும் நான் யார் என்கிற உறவின்முறை உனக்குத் தெரிந்திருக்கலாம். இருப்பினும் இங்கு உனக்கு நினைப்பூட்டுகிறேன். உனது தந்தை இறக்குங்காலத்தில், அவரது மூத்த மனைவியாகிய ஜானகியம்மாளின் சகோதரனுக்கு உன்னை விவாகம் செய்து வைக்கும்படியாகக் கூறியது உனக்கு நினைவிலிருக்கலாம். அந்த அதிர்ஷ்டஹீனன்தான் நான். உனக்குச் சிறு பிராயத்தில் பெப்பர்மெண்டும், பிஸ்கெட்டும் வாங்கியளித்த பாவியும் நானே. எனது துரதிர்ஷ்டத்தாலேயே எல்லாம் பாழாயின.

தன்னுடைய பிராண சிநேகிதையானாலும் தனது அந்தரங்கமான ரகசியத்தை வெளியிடத் துணிந்து யாரும் முன் வருவதில்லை. பிறர் விஷயத்தை ஆராய்வதிலேயே நாட்டம்.

210024

இப்போது நான் இக்கடிதம் எழுதத்துணிந்தது எதற்கெனில், உன் பெரிய தாயாரின் உறவின் முறையை வைத்துக்கொண்டு கோபியையும் அழைத்துக்கொண்டு இக்கலியாணத்திற்கு நீ கட்டாயம் வரவேண்டுமென்று பிரார்த்திக்கும் பொருட்டாகத் தான். பாழும் வைதவ்யம் என்கிற துற்காற்று உன்மீது அடித்துவிட்ட பெரும் பாதகம் என் மனோராஜ்யங்கள் எல்லா வற்றையும் நாசமாக்கிவிட்டது. உம்.....இனி எதைக் கூறியும் பயனில்லை, நீயும் கோபியும் அங்கு இரயில் ஏறியதும் எனக்கு ஒரு தந்திபடித்துவிட்டால், நான் இரயிலடிக்கு வந்து உங்களை அழைத்துக்கொண்டு போகிறேன். நீங்களிருவரும் வந்தால்தான் எனக்கு மனம் சந்துஷ்டியாகவிருக்கும். என் னுடைய கோரிக்கையை நீங்களிருவரும் பூர்த்திசெய்யவேண் டும். என் சகோதரி ஜானகி உயிருடன் இருந்திருந்தால் இக்காரி யம் வேறுவழியில் முடிந்திருக்கும். எல்லாம் எனது துரதிர்ஷ் டம்தான். எய்தவனிருக்க அம்பை நோவதிலென்ன பயன்? நான் இக்கடிதம் எழுதியதற்கு மன்னிக்கவும். உன் தந்தியை முதலிலும் பிறகு உங்களையும் எதிர் பார்க்கிறேன். கட்டா யம் வரவும். என்னவோ எழுதினேன் என்று அலக்ஷியமாக இராமல், வந்து என்னை மகிழ்விக்கவும்: நீ வர இசையாவிடினும் என் அன்பு உன்னை இழுத்துக் கொண்டு வந்துவிடுமென்று நம்பு கின்றேன்.

இங்ஙனம் உங்கள் வரவை
எதிர்பார்க்கும்
விமலநாதன்

இங்ஙனம் வரைந்திருந்த கடிதத்தைப் படித்தாள் சுலோசனை. அவ ளுக்குண்டான வியப்பிற்கு எல்லையே இல்லை. விமலநாதன் தனக்கு உறவினன் என்பதையே இதுபரியந்தம் அவள் அறியமாட்டாள். தனக்கு மிகவும் நெருங்கிய உறவாயும், தன் தகப்பனர் யாருக்குத் தன்னை மணம் செய்விக்கும்படியாகக் கூறினரோ அந்த மனிதரே

சமயற்காரிகளே தாயாரைப்போலச் சிலரிடத்தில் நடக்கிறார்கள். தாயார் களே சத்ருவாகச் சிலருக்கு அமைகிறார்கள். அவரவர் செய்த கர்மமிது,

அவராயும், தனக்குத் தின்பண்டங்கள் வாங்கியளித்த உத்தமனும் அவராயும் அமைந்த ஆச்சரியத்தைத் தாங்கமாட்டாமல் தயங்கித் தத்தளித்தாள். "இதென்ன வியப்பு! நான் அந்த மனிதர் யாரோ வென்று இருந்தேனே! அவரா விமலநாதன்! எனது பெரிய அன்னையாரின் சோதரரா விமலநாதன்! என் தந்தை என்னைப் பாணிக்கிரகணம் செய்துகொடுக்கும்படியாகக் கூறிய அவரா இந்த விமலநாதன்! அடாடா! என்ன ஆச்சரியம்! அவருக்கா விவாகம்! இன்னும் விவாகமாகவில்லையா! இதுபரியந்தம் ப்ரம்மச்சாரியாகவா இருந்தார்? ஐயோ! எத்தனைவிதமான மாற்றங்களெல்லாம் நேர்ந்துவிட்டன. பாவி என்னை இவருக்கே மணம் செய்வித்திருந்தால் நான் இக்கதிக்கெல்லாம் ஆளாகியிருக்கமாட்டேனல்லவா? என்னை வேண்டுமென்று படுகுழியில் தள்ளிப் பாம்பின் வாயில் சிக்கவைத்துப் பாழாக்கிவிட்டார்களே! அந்தோ! என் அங்கம் எறிந்தாலன்றி என் மனக்குறை யகலுமா! உம்....விதி செய்யும் கூற்றினை விளம்பிடத் தரமன்று. என் தந்தை ஏன் இறக்கவேண்டும்? அவர்தான் இறந்தார் எனில் என் பெரிய தாயுமா மரிக்கவேண்டும்? அந்தம்மையின் ஜீவியம் எனக்கோர் கனவுபோன்றல்லவா இருக்கின்றது? என் தந்தை எனக்குப் போதித்ததும் ஏதோ சிறிது நினைவிற்கு வருகின்றது. என்ன பாபத்தைச் செய்தோ நான் மிக மேன்மை பொருந்திய மனிதர்களை இழந்தேன். தன்னந்தனியே; தெருவில் நிற்கிறேன்; தனிமரமானேன். தங்களுடைய சகோதரியின் சக்களத்தி மகள் நான் என்பதையும் கவனியாது, கடிதம் எழுதி யிருப்பது வெகு ஆச்சரியமாக இருக்கின்றது. உம். சிறிதும் அறிவென்பது அற்ற அற்பமதியினளான என் தாயே என் தலைக்குத் தேடிய கல் இது. ஐயோ! நாம் ஏன் பிறரை நோகவேண்டும்? எனது விதி விதி; விதி. என் விதிசெய்த சதியே என் கதி இவ்விதமாகிவிட்டது." என்று பலவாறெண்ணிப் பெருமூச்சுவிட்டாள். பிறகு இக்கல்யாணத்திற்கு நாம் போகலாமா வேண்டாமா என்று பல விதயோசனைகளிலாழ்ந்தாள். வெகு நேரம் ஆலோசனை செய்தாள்.

ஆதிமுதல் அந்தம்வரையில் கூடவே பழகினாலும் சிலருடைய குணப்போக்கை அறியமுடிகிறதில்லை. அவர்களோ பக்காக் குள்ளநரிகளாக எல்லோருடைய விஷயங்களையும் எப்படியோ கிரகித்துவிடுகிறார்கள்.

"ஆகா! நமக்கு இவ்வுலகத்தில் பந்துவர்க்கத்தில் கோபியைத் தவிரவும், சிநேகத்தில் பிரேமாமணி, சரோஜனியைத் தவிரவும் வேறு மனிதர் இருப்பதாகத் தெரியாமல் நாம் இதுபரியந்தமிருந்தோம். நமது தாயைவிட அதிகமான பெரிய தாயாரின் பெற்றோர்கள் இருப்பதாக இப்போதே அறிந்தோம். ஆகையினால் அவர்களாக நம்மை அழைக்கும் காலத்தில் நாம் சென்று அவர்களை அண்டிக் கொள்வது என்றும் நன்மையேயாகும். நமக்கு ஓர் பெரிய துணை இருப்பதாகச் சிறிது மன திருப்தியாவது இருக்கும். ஆகையினால் நாம் இச்சமயம் செல்வதே உசிதம்" என்று முடிவு செய்துகொண்டாள். பிறகு இக்கடிதம்வந்த விஷயத்தை மறைத்துவிட்டுக் கடிதத்துடனிருந்த கல்யாணப் பத்திரிகையைமட்டும் தனது காப்பாளர்களிடத்தில் காட்டி அக்கல்யாணத்திற்குத் தங்களை யனுப்பவேண்டுமென்று கேட்டாள்.

இதுகேட்ட காப்பாளிகள் சரியென்று ஒப்புக்கொண்டு உத்தரவளித்ததோடு அவர்களுக்காகும் செலவுக்காகப் பணமும் கொடுத்தார்கள். தன் சிநேகிதைகளிடமும் இவ் விஷயத்தைத் தெரிவித்துவிட்டுப் பிரயாண சித்தம் செய்யலானாள். அன்றே பிரேமாமணியுடன் கடைக்குச் சென்று அழகிய வைரம் பதித்த மோதிரம் ஒன்றும், நிரம்ப ஜரிகை வேலைப்பாடமைந்த உருமால் ஒன்றும், சரிகைச் சேலை ரவிக்கைகளும் வாங்கிக்கொண்டுவந்தாள். தான் புறப்படும் நேரத்தைக் குறிப்பிட்டு விமலநாதனுக்குத் தந்தி கொடுத்துவிட்டாள். கோபியையும் அழைத்துக்கொண்டு ரயிலேறிவிட்டாள். சுலோசனை இதுவரையில் எந்த உறவினர் ஊருக்கும் சென்றதில்லையாகையால் அவள் ரயில் பிரயாணம் செய்ததே மிக அபூர்வம். அதோடு இன்று தான் தனது தம்பியுடன் திடீரென்று புறப்பட்டுப் புதிய ஊருக்குப் புதிய மனிதரின் முன்னால் செல்வதென்றால் ஒருவிதமான அச்சமும் கூற விபலாத மாதிரி

என்னப்பனே! சர்வேசா! உனது சரணங்களாகிய பத்ம மலருக்கே அடியேன் இப்பிரபஞ்சமென்னும் தடாகத்தில் துளைகின்றேன். நீ கிருபை செய்து அஞ்சேலெனக் கூறி கஞ்சமலர்த்தாளை எனக்கு அளித்து சஞ்சலந் தீர்த்து ஆதரிக்கக் கோருகின்றேன்.

யான உணர்ச்சியும் ஒன்று கூடி அவள் உள்ளத்தில் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தன. இவளுடைய காப்பாளிகளில் ஒருவரே நேரில் வந்து சலோசனை செல்லும் ஊருக்கே செல்லும் மற்றொரு பெரியவர் துணையில் இவர்களையும் ஏற்றிவிட்டுச் சென்றார்.

அந்த வண்டி இரு புறமும் பலகைப் போட்ட தனித்த சிறிய வண்டி. அதில் இவர்கள் ஏறுவதற்கு முன்னரே ஒரு தடித்த ஆசாமி உட்கார்ந்திருந்தான். அவ் வண்டியில் வேறு சிலர் ஏற வந்த தருணம் அந்த தடித்த ஆசாமி "ஐயா! இன்னும் இரண்டு பேர்கள் அடுத்த ஸ்டேஷனில் வரப் போகிறார்கள். இதோ டிக்கட்டு பாரும், ஆகையினால் இங்கு இட மில்லை" என்றான். நமது சலோசனாவோ மனதில் எண்ணறியாத வேதனைகளால் உலவப்பட்டுக்கொண்டே கையில் தினசரிப் பத்திரிகையைப் பிடித்தவாறு உட்கார்ந்திருந்தாள். வண்டியும் புறப்பட்டு அடுத்த ஸ்டேஷனை யடைந்தது. அது பெரிய ஸ்டேஷனாகையினால் சிறிது நேரம் நிற்க ஏது உண்டாயிற்று. வண்டி நின்றவுடன், அந்த தடித்த ஆசாமி தலையை வெளிப்புறம் நீட்டிப் பார்த்தான். உடனே சுமார் 22 வயது மதிக்கக் கூடிய ஒரு ஸ்திரீயும், 15 வயது மதிக்கக் கூடிய ஒரு யுவதியும் வெகு விரைவாயும் தடபுடலாகப் பேசியவாறும் வெகு உல்லாசமாக லஜ்ஜை என்பதைப் பற்றி கேட்டும் அறியாதவர் போலப் பெருநகை புரிந்த வண்ணம் வண்டியில் ஏறினார்கள். வண்டியிலிருந்த தடியன் அவர்களுடைய மூட்டை படுக்கை முதலியவற்றை வாங்கி வண்டியில் வைத்துவிட்டு அவர்களையும் உட்காரச் செய்தான். அவ்விரு பெண்களோடு மற்றொரு ஆசாமி வந்து அத் தடித்த மனிதனைப் பார்த்து, "என்னங்கோ! ஜாக்ரதையா இட்டுக்கினு போங்கோ, தெரிஞ்சுதா; அடீ, குட்டீ! பத்திரம். எப்படி எப்படி வாங்கவேண்டுமோ அப்படி வாங்கு இல்லாவிட்டால் இறங்கிவிடு, ஜிமே. ஆ! மறந்துவிட்டேனே முதலில், ஒட்டியாணம் கொண்டுவந்திருக்கிறாா பாரு! என்ன மாப்பிள்ளை சும்மா இருக்கிறயே!" என்றான்.

அருள்மாரி காணாது அலையும் பயிராகிய எனக்கு மாரியளித்து மகிழச் செய்வாய் என் தாயே! லோகாக்ஷி! ஜகன்மாதா!

அதற் கந்த தடியன் "இந்தா! இனிமேல் நீ இங்கே நிக்காதே, போ! நான் கொண்டுவரவில்லை. நீ என்ன செய்வாய்? என்னிடம் ஒப்பித்தாயிற்று. இனிமேல் நீ அனுவசியம் போ!" என்று நகைத்துக்கொண்டே கூறினன். அதற்குள் அங்கிருந்த பெண்களிருவரில் பெரியவள் "என்னுங்கோ! ஒட்டியாணம் கொண்டுவாரேன் என்று சொன்னீங்களே! அது எங்கே! இப்படி கொண்டாங்க' என்ருள். அதே சமயத்தில் மற்ருெருத்தியான சிறு நங்கை அந்தத் தடிய னின் சட்டையில் கையை விட்டு நாற்புறமும் அழுத்திப் பார்த்தபடி பெருத்த சத்த மிட்டு "பக்காடீ! இதோ இருக்கிறது! இதோ இருக் கிறது!" என்று ஆரவாரம் செய்தாள். அதற்குள் அந்த மனிதன் "ஏ குட்டி! நீதான் கெட்டிக்காரி! சட்டையிலிருந்து அதை வெளியில் எடு. சட்டைப் பையிலிருப்பதையும் ஒருகைப் பாரு" என்றுன். அந்த நங்கை அவ்வாறே கையைப் போட்டு ஒட்டியாணத்தை எடுத்தாள். தடியன் இத்தனை அமர்க்களத்தையும் சகித்துக்கொண்டு தேன் குடித்த நரி போலப் பல்லைத் திறந்துகொண்டு உட்கார்ந்திருந்தான்.

நமது ஏந்திழை மடந்தையாகிய சுலோசன இவைகளை எல் லாம் கவனிக்கவேண்டாமென்று நினைத்தாலும் இந்த ஆரவார மொழிகள் தாமாகவே செவியிற் புகுந்து அந்தப் பக்கம் நோக்கும் படியாக விழியைத் திருப்புகின்றன. சுலோசனவுக்குத் துணையாக வந்திருந்த முதியவரும் அவருடன் கூட வந்திருந்த ஸ்திரீகளிரு வரும் இந்த வேடிக்கையைக் கண்டு நகைத்துக்கொண்டே அதிக ஆச்சரியத்துடன் அதைக் கவனித்தவாறிருந்தார்கள். அங்கு வந்த இரு நங்கையர்களுடைய அலங்காரத்திலிருந்தும், நாணமற்ற தன்மையிலிருந்தும், குலுக்கிப் பிலுக்கி நடித்த நடிப்பிலிருந்தும், பேசும் விநோதத்திலிருந்தும், அவர்களைப் பார்த்ததும் அவர்கள் விலை மாதர் என்று சாதாரணமாகத் தெரிந்துகொள்ளலாம். அவர் களுடன் வந்திருந்த மனிதன் இவ் விருவருடைய மாமா என்பதும்

அலைகடல் துரும்பென இன்னிலையற்ற சம்சாரத்தில் உழலும் என்னை உனது ஒப்பற்ற சரணகமலங்களாகிய கரையில் சேர்த்துக் களிக்கச்செய்து நற்கதியளிக்கவேண்டும். என் தாயே! கருணுசாகரீ!

விளங்கிவிட்டது. இந்தக் கன்ராவியைப் பார்த்த உடனே அங்கு முதியவருடன் உட்கார்ந்திருந்த இருவரும், ஒருவரோ டொருவர் "ஆகா! மைலாவும் மணிவண்ணனும் போலிருக்கிறதே!"

(ராதாமணி என்கிற அருமையான புத்தகத்தைப் படித்தால் மைலா என்கிற தாசியின் ;சாகஸத்தையும், மணி வண்ணன் என்கிறவனின் கதியையும் அவனுடைய மனைவி யின் அபார நற்குணத்தையும் இன்னும் அநேக விசித்திர சம்பவங்களையும் காணலாம். விலை ரூபா 2-8-0 தான். அழகிய படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. "ஜகன் மோகினி" ஆபீஸில் கிடைக்கும்.)

என்று தாங்கமாட்டாத வியப்புடன் கூறிக்கொண்டார்கள். சுலோசனாவோ "இத்தகைய மானங் கெட்டதன்மையும் உண்டா!" என்று தனக்குள் வியந்தவாறு உட்கார்ந்திருந்தாள்.

மீண்டும் அந்த மாமா "என்ன மாப்பிள்ளே! இந்தக் குட்டி உனக்கு. இந்த குட்டி என் பெண்ஜாதி. இவளை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்." என்றான். அப்போது அந்த சிறிய நங்கை அந்த மாமாவின் கன்னத்தில் ஒரு அறை விட்டு "போடா! புத்தி கெட்ட மாமா? சிச்சி! போ!' என்று மரியாதை செய்தாள். பெரிய நங்கை மாமாவின் கையைப் பிடித்துத் தள்ளி "மாமா! நீ போயேன்; இங்கே நிற்காதே! எனக்குத் தெரியாதா! இனிமேல் பார்த்துக் கொள்வேன்" என்றாள். அதற்குள் வண்டி புறப்படுவதற்காக மணி யடித்து விட்டார்கள். (மாமாவும் மற்றோரும் மேலும் பேசிக் கொண்ட ஆபாசங்களை விவரிக்க மனங் கூசுகின்றது. இந்தக் காட்சி முற்றும் நாம் கண்ணுற் கண்டவையாகும். நாவலில் மட்டும்

சர்வேசா! இந்த பாசபந்தத்தில் கட்டுண்டு விமோசனமடைய மார்க்க மின்றிப் பேசும் பொம்மைபோல எத்தனை காலம் பாபவினையைச் செய்வது? இதற்கோர் முடிவு இல்லையா! உனது அருள் பிறந்தால் யாவும் பறந்துவிடு மன்றோ!

எழுதிவிடும் விஷயங்கள் பிரத்யக்ஷமாக நடக்காதவை'யென்பது சில ருடைய அபிப்பிராயம். நாவலில் வரைவதை விடப் பன்மடங்கு அதிக ஆபாசமான சம்பவங்கள் நிதரிசனமாக நிகழ்கின்றன என் பதை நன்கு சுட்டிக் காட்டும் பொருட்டே இவ் விஷயத்தை இங்கு பிரசுரிக்கலானேம்.—ப-ர்., பிறகு வண்டியும் மெல்ல நகர வாரம் பித்தது. பெரிய நங்கை அந்தத் தடியனின் ஜோபியில் கையைப் போட்டு அதிலிருந்த நான்கு வடமுள்ளதும், வைரத்தினுலான முகப்பு இழைத்ததுமான சங்கிலியை கூசாமல் எடுத்துத் தன் கழுத் திலணிந்துகொண்டு "என்னுங்கோ நல்லா இருக்குதா!" என்முள்.

தடியன்:—பேஷ். உனக்கு நன்ரு யிராவிட்டால் இந்த நகைக்கு மதிப்புக் கிடைக்குமா? இப்போது தான் இந் நகையி னுடைய பிரகாசம் அதிகரிக்கின்றது.

பெரிய நங்கை:—ஒட்டியாணத்தையும் அணிந்துகொண்டு "என்னுங்கோ! ராத்திரி வண்டியில் வரவேண்டு மென்னு நான் சொல்லியும் இப்படி வந்தீங்களே? போங்க....இந்தப் பிரயாணம் எனக்குப் பிடிக்கவே இல்லே. இந்த வண்டியில் ஏன் ஏறினிங்க. இரண்டாவது வகுப்பு டிக்கட்டு வாங்குகிறதுதானே!" என்று கூறி முகத்தைச் சுளித்தாள்.

தடியன்—எனக்கு இன்று சாயந்திரமே அவசரமான வேலே யொன்றிருப்பதால் இப்போது போகும்படியாக நேர்ந்துவிட்டது. "கோபிக்காதே! வரும்போது இரவு வண்டியில் வருவோம். இரண் டாவது வகுப்பு டிக்கட்டுத்தான் வாங்கலாமென்றிருந்தேன். என் னேடு என் தந்தை வந்தார். அவரே எனக்கு டிக்கட்டு வாங்கிவிட் டார். நான் மிகவும் தந்திரமாக இந்த இரண்டு டிக்கட்டும் வாங்கி னேன். கோபிக்காதே கண்ணு! மேலும் நாம் தனிமையில் சென் ருல் பரவாயில்லே. இந்தக்குட்டி வருகிருளே!

உன்னே நினைக்கின் கவலே ஒழிந்ததுபோலுள்ளது. சமுசாரத்தை நோக்கின் அதனுள் அழுந்திவிடுகிறேன். தடாகத்தின் சேற்றுக்குள் இருந்து செந்தாமரை புஷ்பமாகி உன்னடியைச் சேருவதுபோல சம்சார தடாகத்தில் கவலேச் சேற்றில் அழுந்தியிருந்து பக்தி என்ற புஷ்பம் மலர்ந்தபிறகு உன் னடி சேரவேண்டும்போலிருக்கிறது.

சிறிய—"என்ன மாமா! நான் வருவது உங்களுக்குப் பிடிக்க வில்லையென்று முதலிலேயே தெரிவித்திருந்தால் நான் வராமலிருப் பேனோ"! என்று அழுவதுபோல நடித்தாள். அதற்குள் தடியன் அவளைத் தட்டிக்கொடுத்து. "நான் வேடிக்கைக்குச் சொன்னேன். நீ அழாதே!" என்று சமாதானம் செய்தான்.

பெரியவள்—என்னாங்கோ! ஒட்டியாணமும் சங்கிலியும் எப்படி கொணாந்தீங்கோ! அந்தப் பிசாசு கொடுத்ததா?" என்று சற்றுங் கூசாது அந்த தடியனின் மனைவியை இந்த வெட்கங்கெட்ட பரத்தை "பிசாசு" என்று கூறுவதை மானங்கெட்டு, மதியழிந்து மன்னார்சாமிபோல வீற்றிருக்கும் இத்தடியன் கேட்டுக்கொண்டே கொல்லென்று நகைத்து, "ஆ! அந்த முண்டையா கொடுப்பாள்! இவைகளை அழித்துவிட்டுப் புதியமாதிரியாகச் செய்து தருகிறே னென்று கூறி ஏமாற்றி வாங்கிக்கொண்டுவந்துவிட்டேன். "மயிலே! மயிலே! இறகு போடு." என்றால் போடுமா! அப்படித்தான் தந்திர மாக வாங்கவேண்டும்.

பெரியவள்—(நகைத்துக்கொண்டே) இன்னாங்கோ! பச்சை சேலை எங்கே மறந்துட்டீங்களா!

தடியன்—"மறப்பேனா கண்ணே! இதோ பெட்டியில் வைத் திருக்கிறேன். அதுமட்டுமா! ஒரு ஸில்கும்கூட வாங்கிக்கொண்டுவந் திருக்கிறேன்." என்று அவன் கூறி முடிப்பதற்குள் அப்பெண்க ளிருவரும், "எங்கே! எங்கே! காண்பியுங்கள்". என்று கேட்டுக் கொண்டே பெரியவள் அவனுடைய பெட்டிச் சாவியை அங்கிப் பையிலிருந்து எடுத்துப் பெட்டியைத் திறந்து அதிலிருந்த சேலை ரவிக்கை. மணிபர்ஸ் முதலியவற்றை எடுத்துத் தன் பெட்டியில் வைத்துவிட்டு "பேஷ். நல்லா இருக்குங்க". என்றாள். மணிபர்ஸை எடுத்ததைக்கண்ட தடியன் "அபரஞ்சீ! அதை ஏன் எடுக்கிறாய்!

மானஸீகமாக பக்தி செய்யும் மார்க்கம் தெரியவில்லை. உன்னுருவைக் கண்டு மனத்தை ஒருங்கே நிலைக்கச் செய்யும் வழியும் இன்னதென்று அறியக் கூடவில்லை. பிறவிக்கடலை நீந்துவ தெப்படியோ? நினைக்கின் நடுங்குகின் றதே உள்ளம்.

இப்படிக்கொடு." என்றான். அந்த வார்த்தையைக் கவனிக்காமல் தன் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டுப் பிறகு "என்னுங்க! அந்தப் பை எனக்குத்தானுங்க. நான் இனித் தரமாட்டேன்" என்று கூறிய வாறு தடியனின் கையைப் பிடித்தவண்ணம் பெருத்த சத்தமிட்டு நகைத்துக்கொண்டே அவன் கையில் கட்டியிருந்த ரிஸ்டுவாச்சைக் கழற்றித் தன் கையில் போட்டுக்கொண்டு தடியனின் ஒரு வைர மோதிரத்தையும் வெடுக்கென்று கழற்றித் தன் விரலில் அணிந்து கொண்டு "பார்த்ீர்களா! என் கைக்கு எப்படி இருக்கிறது." என்று கேட்டு மீண்டும் நகைத்துக்கொண்டே மயக்கினாள்.

அந்தத் தடியனுக்கு அச்செருக்கி தன் கையைத் தொட்டுப் பிடித்துக்கொண்டதுமே சந்தோஷம் தலைக்கேறிவிட்டது. தானிருக் குமிடம் புகை வண்டித்தொடர் என்பதையும், அருகில் அன்னியர் இருக்கிறார்கள் என்பதையும் அறவே மறந்துவிட்டவனைப் பற்கள் முப்பத்திரண்டையும் திறந்துகொண்டு தன்னையே மறந்தவனைப் பரவசமாகி மணிபர்ஸின் விஷயத்தைக் கணத்தில் மறந்து மோகித்து, மோஹினியிடம் அமிர்தம் வாங்கிப் புசிக்கநின்ற அசுரர் போல உட்கார்ந்துவிட்டான். இந்த பக்குவமான தருணத்தை பறிந்துகொண்ட பாத்தை, தன் பெயருக்கேற்பக் கடியாரச் சங் கிலி, வைரமோதிரம் இவைகளைப் பறித்துக்கொண்டு பிறகு தடி யனை நோக்கிக் கேட்டபோதுதான் அவனுக்குச் சற்று தெளிவு உண்டாயிற்று. அவளுடைய கரத்தைப்பிடித்து அழகு பார்த்த படியே "என் கையிலிருக்கையில் இவை ஏதோ இருள்மூடியவை போல விருந்தனவே. இப்போது எப்படி ஜ்வலிக்கின்றன! ஆகா! இந்தக் கையின் மகத்துவம் இது" என்று கூறிக்கொண்டே கையை முத்தமிட இழுத்தான். கை வாயருகில் செல்கையில் அந்த நங்கை வெடுக்கென்று கையை உதறிக்கொண்டு "என்னுங்கோ இது!

படித்த மனிதர்கள் பேசுவதற்கும் படியாத மூடர்கள் பேசுவதற்கும் யானைக்கும் பூனைக்கும் உள்ள வித்யாசமிருக்கின்றது. படிக்காத மூடர்கள் தாம் பிடித்ததையும் விடுவதில்லை; பிறர் சொல்வதையும் வாங்கிக்கொள்வ தில்லை. முரட்டுத் தனமாயும், வெறுப்பேற்படும் வண்ணமாயும் பேசுகின் றார்கள்.

சும்மா இருங்கோ!" என்று ஜாடையாக அருகில் மனிதரிருப்பதைக் குறிப்பாகத் தெரிவித்தாள். பிறகுதான் தடியன் அன்னியர் மத்தியில் தான் இருப்பதை அறிந்தான். பின்னர் தான் கொண்டு வந்திருந்த தின்பண்டங்களை அவ்விருவருக்கு மளித்தான். அவர்கள் அவைகளைத் தின்று வெற்றிலை போட்டுக்கொண்டார்கள். அக்காலத்தில் நடந்த அவர்களுடைய சம்பாஷணையை நாம் விவரிக்க மனம் துணியவில்லை. "ஆபாச" மென்கிற ஒரு பதத்துடன் நிறுத்தி விடுவோம். பிறகு இருவரும் சீட்டாட்டம் ஆடினார்கள். இடை இடையே பலகாரமும் பழமும் வாங்கித் தின்றார்கள். இதுபோன்ற கோலாகல லீலைகள் அநேகம் நிகழ்ந்தன.

அங்குக் கூடவிருக்கும் முதியோர் இந்தக் கண்திராவையைக் கண்டு பேராச்சரியமடைந்து தமக்குள் நகைப்பதும் வெறுப்பதும் தம்முடனிருக்கும் பெண்களைப் பேசாதிருக்கும்படிக் கூறுவதுமாக இருந்தார். நமது மங்கையர்க்கரசியாகிய சுலோசனாவுக்குத் தான் என்றுமே கண்டறியாத இவ்வாச்சரியமான—ஆபாசமான—அருவருப்பான சம்பவங்களினால் மனதில் சொல்லொணாத லஜ்ஜையும், வெறுப்பும்தோன்றி அவளை வதைத்தன. கரத்தில் பத்திரிகை வீற்றிருக்கின்றதேயன்றி இந்த ஆபாசமொழிகளே செவியில் விழுகின்றன. 'அவைகளைச் செவியில் வாங்காமலிருக்க முயல்வதெல்லாம் வீணாகின்றது. அவள் உட்கார்ந்திருந்த வண்டியின் பக்கத்து வண்டிக்கும் இவ்வண்டிக்கும் மத்தியில் ஜன்னல் ஜன்னலான பலகையால் தடுத்திருப்பதால் அடுத்த வண்டியிலிருப்போரும் இந்த ஆபாச சம்பவங்களைக் கண்டு மனம் போனவாறு பேசிக்கொள்வதும் நகைப்பதுமாக விருந்தார்கள். அவர்களில் இருவர் சம்பாஷித்துக்கொண்டது நமது மின்னாளின் செவியில் யதேச்சையாக விழுந்தது. அதாவது,—ஒருவன் மற்றவனைப் பார்த்து "இதென்னடா வியப்பு! இவள் பிறவியிலேயே தாசி! இவ்விதமிருப்பது இவர்களுக்குச் சகஜம். நல்ல குலத்தில்

"எல்லோரும் கடவுளுடைய ஆணைக்குள்ளடங்கியவர்கள்" என்கிற பகுத்தறிவைச் சிலர் அடியோடு மறந்துவிட்டு மனிதருக்கு மனிதர் அடங்கியவராக நினைத்து அதிகாரம் செய்து அட்டகாசமாய்ப் பேசி விடுகிறார்கள்.

பிறந்த மங்கையர்களே இவ்விதம் கெட்டுவிடும்போது இது ஒரு அதிசயமல்ல. இப்போது நாம் தங்கியிருந்த வீட்டிற்கு மூன்றுவது வீட்டில் ஒரு அழகிய மங்கை 'சுலோசன' என்கிற பெயருடன் இருக்கிருள். அவள் செய்யும் அநியாயம் கணக்கில்லையாம். அவள் வீட்டு வாயிலில் தினம் சுற்றி பலையும் சோதாக்களை நான் கண்ணுறக் கண்டதுண்டு. அவள் பாலிய விதவையாம்; பார்ப்பதற்கு மட்டும் வெகு யோக்கியமானவள் போல இருக்கிருளாம். ஆனால் அந்த நங்கையை நான் பார்த்ததே இல்லை. வெகு ரூபவதியாம்: உண்மையில் எது நிச்சயமோ, யார் கண்டது. அவள் சினிமாவிலும் நடிக்கிருளாம். சாமளா பிலிம் கம்பெனியார் அவளை மிகவும் மேன்மையுடன் பாராட்டுகிருர்களாம். இவ் விவரங்கள் ஓட்டலில் பேசிக்கொண்டார்கள்!" என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள். இதைக் கேட்ட சுலோசனவின் ஆவி பறக்கின்றது. "ஐயோ! ஒரு பாபமும் அறியாத நம்மீது இத்தகைய வசைகளா உலாவுகின்றன. என்ன அநியாயம்! என்ன கொடுமை! நாம் எடுத்த ஜன்மத்தின் பலன் இதுதான! இத்தகைய அபாண்டத்தைச் சுமக்கும் சுமைதாங்கியாகவா நான் ஜனித்தேன். ஐயோ! பல மனிதரறிய இத்தகைய அநீதிகள் கண் முன்னல் நிகழ்கின்றன. இவைகளுக்கெல்லாம் ஒன்று மில்லை. ஒரு குற்றமும் செய்தறியாத, நிரபராதியாகிய என் தலையிலா இடி விழவேண்டும். அட அக்கிரமமே! இந்தத் தடியனின் மனைவியின் வயிறு என்னவாறு பற்றி எரிகின்றதோ?

"மனையவள் விரோத மொன்று; மாதவன் விரோத மிரண்டே;
தனமது விரயம் மூன்று; சகலரும் நகைத்தல் நான்கு;
தினந் தினம் லஜ்ஜை யைந்து; தேகத்தில் பிணியோ டாறு;
வினையுறு நரகமேழு; வேசியை விரும்புவோர்க்கே"

என்று பெரியோர் வேசியுறவு கொண்ட வீணர்களைப் பழித்

அடக்கம், பொறுமை, பணிவு முதலியன உள்ளவர்கள்தாம் எல்லோராலும் போற்றப்படுகின்றனர். அவை நீங்கியவர்கள் அவர்களைப் போன்றவர்களாலும் புகழப்படுவதில்லை. அதிலும் குறைதான்.

திரைத்தது உண்மையாகத் தானிருக்கின்றது. உத்தமியை வயி றெரியச் செய்து விட்டு, இவ்விதம் சந்தோஷமாகக் காலத்தைக் கழித்துக் கைப்பொருளையும் சோரவிட்டு இவ்வாறு அட்டூழியம் செய்யும் ஜனங்களை எல்லோரும் ஆதரித்துப் பேசுவதும், நிரபராதி யான என் போன்ற அனாதைகளை அடாத வார்த்தைகளான சுடு சரங்களால் தாக்குவதும் என்ன கொடுமையோ! ஹா! ஈசா! இவ் விதம் தானா உலகத்தில் அநியாயம் நடக்கும்? நீயா இவைகளைக் கண்டு சகிக்கின்றாய்? ஐயோ! என் மனம் தத்தளிக்கின்றதே! என்ன செய்வேன்? என்னை யறியாது மறைவில் இது போன்ற வசைகள் என்னை இன்னும் எத்தனை தொடர்கின்றனவோ தெரிய வில்லையே! கடவுளின் மீது ஆணையாக நான் நிரபராதி என்பதைத் தவிர வேறு என்ன சொல்லக்கூடும் ஆ! ஆ! விதியின் கூற்றே! கலி யின் கொடுமையே!'' என்று தனக்குள் பலபடி எண்ணி மன மழுங் கிச் சோர்ந்தவளாய்த் தன் கரத்திலிருந்த பத்திரிகையால் முகத்தை மறைத்துக்கொண்டு கண்ணீர் பெருக்கிய வண்ணம் சாய்ந்துவிட்டாள். தான் இறங்கும் இடம் எப்போது வரும் என்று எதிர் நோக்கியவாறு உட்கார்ந்திருந்து இரயில்வே கைடுடன் (Guide) கடியாரமும் தன்னிட மிருந்தமையால் இத்தனை மணிக்குத் தான் இறங்கவேண்டு மென்பதை யறிந்துகொண்டாளா கையினால் தன்னைத் தானே தேற்றிக்கொண்டு, கண்ணைத் துடைத் துக்கொண்டு ஸ்டேஷனைப் பார்த்தபடியே வீற்றிருந்தாள். குறித்த நேரத்தில் இவள் இறங்கவேண்டிய ஸ்டேஷனாகிய ஊர் வந்தது. வண்டியின் வேகம் குறைந்தது. சுலோசனாவின் மனதில் ஏதோ ஒரு யந்திரம் வேலை செய்கின்றது. வயிற்றில் திகில் 'பக் பக்' என்று தோன்றி மறைகின்றது. "ஸ்டேஷனில் யார் வந்திருக்கிறார்களோ! என்னவோ! விமலநாதரே;வந்திருந்தால் நாம் எவ்விதம் அவரிடம் பேசுவது. அவர் நம்மைப் பார்க்கவேண்டுமென்று கேட்ட காலத் தில் உதாசினமாகப் பதிலளித்துவிட்டோமே! இப்போது அவர்

சில குடும்பத்திலுள்ள கிழவர்கள் முக்கியமான விஷயங்களிலெல்லாம் தலையிட்டுக்கொண்டு பேசத் தெரியாமல் தாறுமாறாக வார்த்தைகளைச் சொல்லிப் பெரிய சச்சரவுகளை உண்டாக்கிவிடுகின்றார்கள். அவர்களைப் பேச வேண்டா மென்றாலோ கோபம் தலைமீது வந்து விடுகின்றது.

என்ன சொல்வாரோ!.என்ன நினைப்பாரோ!" என்றிது போன்ற பல யோசனைகளுடன் இருக்கையில் வண்டியும் நின்றது. கோபிநாதன் வண்டியின் வெளிப்புறத்தில் தலையை நீட்டிப் பார்த்தபடியே வந்தான்.

* * * * *

இது இங்ஙன மிருக்க, நமது விமலநாதன் விவாக ஏற்பாட்டின்படி பெண் வீட்டிற்குச் சென்று விட்டானே யன்றி, மன அமைதியோ, சந்தோஷமோ ஒன்றுமே இல்லை. இதை அவன் ஹிருதயந்தான் அறியும். சுலோசனவிட மிருந்து தந்தியை எதிர் பார்த்தவண்ணம் இருந்தான். வருகின்றளோ, இல்லையோ! என்ன பதில் கிடைக்குமோ வென்ற யோசனையினல் குழம்பி யிருந்த தருணம் தந்தி கிடைக்கப் பெற்றுக்கொண்டு கட்டுக் கடங்கா களிப்புடன் உவகை பூத்தான்....பின்னர் மோட்டார்காரில் ஏறிக் கொண்டு ரயில் வருவதற்கு வெகு நேரம் முன்னரே ஸ்டேஷனுக்கு வந்து ப்ளாட்பாரம் டிக்கட்டும் பெற்றுக்கொண்டு உள்ளே வந்து உட்கார்ந்திருந்தான். பாழும் ரயில் இன்னும் வரவில்லையே யென்று எதிர்பார்த்த வண்ணம் இருக்கையில் இரயிலும் வந்தது. கோபிநாதனுடைய தலையைக் கண்ட விமலநாதன் அந்த வண்டி யருகில் வேகமாகச் சென்றான்.

வண்டி நின்றதும், விமலநாதன், "கோபி! கோபி!" என்று அழைத்தவாறு அந்த வண்டியினருகில் வந்தான். விமலநாதன் ஒருவிதமான நீல வர்ணத்தினலான 'புல் சூட்' தரித்து தனது அழகிய கிராப்பை நன்றாக வாரிவிட்டுத் தங்கக்கட்டுப்போட்டப் பட்ட மூக்குக்கண்ணாடியும், தகதகாயமாய் மின்னுகின்ற கடுக்கனும், விரலில் மோதிரமும், கைக் கடியாரமும், அணிந்துகொண்டு வாக்கிங் ஸ்டிக்குடன் நின்றான். அகன்றும் நிமிர்ந்தும் கம்பீரமாயுள்ள மார்பும், வெகு அற்புதமான வசீகர வதனமும், நடுத்தரமான உயரமும்,

இரவல்வாங்குவதென்ற தீய பழக்க மில்லாதவர்கள் என்றும் ஒரு சரியாக இருக்கின்றார்கள். இரவல் வாங்கி விட்டாலோ அதனலடையும் துன்பம் ஒன்றிரண்டல்ல.

அதற்குத்தக்க பருமனும், கவர்ச்சித்தன்மையுடைய பார்வையும், அரும்புபோன்ற மீசையும், தன் தொழிலுக்குத் தக்கவாறு நியாயங் களை எடுத்துரைக்கவல்ல கம்பீரமான தோற்றமும் உடையவனுப் புன்னகை புரிந்தவாறு வண்டியருகில் நிற்கும் விமலநாதனைக்கண்ட நமது சுலோசனுவின் நிலைமை, விவரிக்க வியலாத விதமா யிருந்தது. சந்திரோதயமானது போன்ற முகத்தேஜஸூம்; பிறைமதியைப் பழிக்கும் நுதலும், வேலை நிகர்த்த விழியும், அபாரமான வனப் பும், வசீகரமும், கவர்ச்சித் தன்மையும், எழில் வெள்ளமும் ஒருங்கே பொங்கி வழிந்தோடும் சுலோசனுவின் மேனியைச் சுற்றி வளைத்து அலங்கரித்துக்கொண்டிருந்த கருப்பு நிறப் பட்டாடை யானது மிக அழகு பெற்று விளங்கியது. சேலையினுல் சுலோசனு வின் அழகு பிரகாசிக்கின்றதா, அன்றி சுலோசனுவின் மேனியை யடைந்ததால் அச் சேலை பிரகாசத்தை யடைந்ததா என்று ஐயுறும் படியாக விருந்தது. மின்னற் கொடி போலும் தந்தப் பதுமை போலு மிருக்கும் சுலோசனு வண்டியிலிருந்து இறங்கும்போது, விமலநாதனின் கண்களும், சுலோசனுவின் விழிகளும் ஏக காலத் தில் வெகு விரைவில் சந்தித்துக்கொண்ட அற்புதமான காட்சியை வர்ணித்துக் கூறத் தரமன்று. அப்போதைய அவர்களின் மனே நிலையையும், அவ் விருவரும் அடைந்த ஆனந்தத்தையும், இன்ப உணர்ச்சியையும், அவர்களும் அவர்களைப் போன்ற நிலைமையி லுள்ளவர்களும் உணர்ந்தறியலாகுமே யன்றி அந்நிலையிலில்லாத பிறரால் கண்டுகொள்வது முடியுமோ? இதனுலன்றே கம்பர் 'பிரிந்த வர் கூடினுல் பேசல் வேண்டுமோ' என்று கூறினுர்.

நான்கு விழிகளும் நிமிஷநேரம் செயலற்று ஒரே நிலையில் நின்றுவிட்டன. அடுத்த நிமிஷமே சுலோசனுவின் விழிகள் பூதேவி யை நோக்கின. இரயிலடியிலிருந்த ஜனங்களெல்லோரும் நமது சுலோ சனுவின் மீது தமது விழிகளைப் பதித்துவிட்டு, மீட்க வகை யின்றித் தடுமாற்ற மடைந்து நின்றுர்கள். வண்டியிலிருந்து இறங்கியவர்களிற்

மாமியார் வீட்டிலிருக்கும் மருகியின் நிலைமையும், புதிதாகக் கலாசாலையிற் சேர்ந்த மாணவியின் நிலைமையும் ஒன்றெனலாம். மருகிக்கு மாமியும் மாண விக்கு உபாத்தியாயினியும் ஒன்று.

சிலர், தம்முடன் வந்தவர்களையும் மூட்டைகளையும் மறந்து நிற்கின்றார்கள். வண்டியில் ஏறுவதற்காக வந்தவர்கள் அப்படியே தடையால் கட்டுண்ட நாகம் போல நின்றுவிட்டார்கள். மூட்டையை இறக்கியவர்களும் ஏற்றியவர்களுமாய்ச் சிலர் தங்கள் கண்களை இழுக்கும் கட்டழகியைப் பார்த்த வண்ண மிருந்தார்கள். சுலோசனா வண்டியிலிருந்து இறங்கியதும் விமலநாதனே அவளுடைய பெட்டியையும் படுக்கையையும் எடுத்துக் கீழே வைத்தான். அதற்குள் 'ட்ரைவர்' அவைகளைக் கொண்டுபோய் மோட்டாரில் வைத்தான். சுலோசனாவுக்கு ஏதும் பதிலே பேச நாவெழவில்லை; அவள் குனிந்த தலை நிமிரவு மில்லை. விமலநாதன், "சுலோசனா! நீ வந்த சந்தோஷத்திற்கு ஈடு எனக்கு வேறொதுவு மில்லை; சௌக்யமா?" என்று கேட்டான். தலையை அசைத்தவாறு பதிலளித்து விட்டாள். விமலநாதன் கோபியைக் கையில் பிடித்துக்கொண்டு ஒரு கையில் 'வாக்கிங் ஸ்டிக்கைப் பிடித்தவாறு நடக்கலானான். சுலோசனாவும் கோபியின் பக்கமாகவே அன்ன மன்ன நடை நடந்து, பெண் யானையைப் போல் நடக்கலானாள். இந்த அற்புத வடிவழகியையும் அவள் செல்லும் நடை யழகையும் கண்டு வியப்புறாதவரில்லை. சுலோசனாவின் ஒருபுற வகுடும், மூக்குக் கண்ணாடியும், 'லோலக்' முதலியனவும் அவளுடைய இயற்கை யழகைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்தன. இருவரும் ஒன்றுமே பேசாமல் மனதில் சொல்லொணாத எண்ணங்களுடன் மோட்டார் நிற்கு மிடத்திற்கு வந்தார்கள். கோபி மட்டும் குழந்தை யாதலால் ஸ்டேஷனை அங்கு மிங்கும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான்;

மோட்டாரின் ஒரு பக்கத்தில் விமலநாதன் நின்று "சுலோசனா! இந்த வண்டியில் "ஏறம்மா!" என்றான். சுலோசனா வண்டி

"இன்றைய செலவிற்குக் கையில் காலணா இல்லையே என்ன செய்வேன், நாராயணா!" என்று மனம் நொந்து தவிக்கும் நேரத்தில் எதிர்பாராத ஓர் விருந்தாளியும் வந்துவிட்டால் வீட்டுக்காரனின் கதி எவ்விதமாகும்? **கடவுளை நம்பினோர் கைவிடப்படார்** என்கிற பழமொழிப்படி அங்கு வந்த விருந்தாளியே அவன் குழந்தைகளின் கையில் ஐந்துரூபாய் நோட்டைக் கொடுக்கும் படியாகக் கடவுள் செய்துவிடின் வீட்டுக்காரனின் மனம் குளிர்ந்துவிடுகின்றது.

210024

மின் கதவின் பக்கம் நின்றுகொண்டிருந்தாள். பிறகு விமலநாதனே கதவைத் திறந்தான். சுலோசனா வண்டியிலேறி அமர்ந்தாள். கோபி சுலோசனாவின் பக்கலிலும், அவன் பக்கலில் விமலநாதனு மாக அமர்ந்தார்கள். உடனே வண்டியும் புறப்பட்டது. விமல நாதன் சுலோசனாவைப் பார்த்த வண்ணமாக உட்கார்ந்திருக்கின் றானே யன்றி அந்த மின்னாள் தலையை நிமிரவே இல்லை. அவளுடைய அழகிய முகத்தில் கூறத் தாமில்லாத ஒருவிதமான விசனக் களை தோன்றி யிருந்தது. "நமது பெரிய அன்னையாரும், தந்தையும், ஏன் இறக்கவேண்டும்?" என்கிற துக்கமே அவளிடம் முதன்மை யான ஸ்தானம் வகித்தது. அந்த விஷயமாகவே யோசித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

விமல:—(ஆங்கிலத்திலேயே பேசத் தொடங்கி) டியர் சுலோ சனா! என்ன யோசனை செய்கின்றாயம்மா! நீ என்னவிதமான பதில் அளித்துவிடுவாயோ! என்று நான்; வெகு கவலைப் பட்டேன். உன் தந்தியைக் கண்டபிறகு தான் எனக்கு உயிர் வந்தது.

சுலோசனா:—(ஆங்கிலத்திலேயே) யோசனை ஒன்று மில்லை. என்னுடைய பிறவிக்கு உறவினர் என்று கூற ஒரு மனிதரு மில்லையே என்று நான் ஏங்கி இருக்கையில் தாங்கள் எனது அருமைப் பெரிய அன்னையாரின் சகோதரர் என்ற உறவின் முறையை அறிந்ததும் என்னை யறியாது என் மனமே என்னை வரத் தூண்டியது. அதிலும் நான் தனித் தனியாக எண்ணியிருந்த எல்லாமனிதரும் ஒரு உருவ மாகிய தாங்களே என்பதைத் தெரிந்துகொண்டபிறகு, தங்கள் விவாகத்திற்கு நான் வராமலிருப்பேனா?

விமலநாதன்:—இதுபரியந்தம் உனக்கு நமது உறவு இன்ன தென்று தெரியாதா! தெரிந்திருக்கு மென்றல்லவா நினைத்தேன்! நீ பரீக்ஷையில் முதலில் தேறியதற்குச் சந்தோஷப்படுகிறேன்.

கையில் பணமில்லாத சமயத்தில் முகத்தின் ஒளியே வேறுவிதமாக மாறி விடுகின்றது. சுருசுருப்பும் ஓடி ஒளிகின்றது. கோபமும், துக்கமும் துணை யாகிவிடுகின்றன. குழந்தை, குட்டி, மனைவி, முதலியோர்மீது சீறிவிழவும் செய்கின்றது. பணத்துச்சாமி குறைந்தால் குணத்துச்சாமி கூத்தாடியாய் விடுகிறார்.

“ ஜகன்மோகினி ” யில்

வெளிவந்த நாவல்கள்.

மலர் 1. ஸ்ரீமான் வடூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய

	காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை

கனகசபை	ரூ.	1	8	0
கோகிலம்	ரூ.	0	6	0

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை

மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் VI.	நவநீதகிருஷ்ணன் ...	ரூ.	2	0	0
	சண்பக விஜயம்	ரூ.	1	12	0
	கௌரீ முகுந்தன்	ரூ.	1	12	0
	சுகந்தபுஷ்பம்	ரூ.	1	0	0
	கோபால ரத்னம் ...	ரூ.	0	14	0
	வீரவஸந்தா	ரூ.	0	8	0
	மாதவமணி	ரூ.	0	3	0

“ஜகன்மோகினி” சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன்	ரூ.	2	0	0
ராதாமணி	ரூ.	2	0	0
நவநீதகிருஷ்ணன்	ரூ.	1	12	0
சண்பகவிஜயம்	ரூ.	1	8	0
கௌரீமுகுந்தன் —	ரூ.	1	8	0

“ ஜகன்மோகினி ” ஆபீஸ்

26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

இனாம் தபாற்செலவு இனாம்

இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு “போலீஸ் கிலி போதிராயர்” “ராவ்பகதூர் ரஸகுல்லா சாஹிப்” என்னும் இரண்டு நாவல்கள் அனுப்பப்படும்.

தமி[illegible]ாவல்கள்

மதனசிங்கர்	ரூ.	1	[illegible]		[illegible]ர்மமுகி	ரூ.	0	12	0
சுந்தரவதனி	ரூ.	0	12	0	வஸந்தசமுத்ரம்	ரூ.	0	12	0
மஞ்சுளா	ரூ.	0	6	0	அமிருதமாலினி	ரூ.	0	4	0

வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி.

அமிர்தாஞ்சனம்



எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

“ஜகன்மோகினி” யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்ச[illegible]போ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.